# உலக சாம்பியன்

[விளையாட்டு மாதமிருமுறை]

பட்டம் -3 போட்டி -6 (Year-3 Issue -6, 1-15 JULY 2012 Rs.10) 1-15 ஜூலை 2012 விலை- ரூ.10

## ஸ்பெயின் மீண்டும் சாம்பியன்






எஸ்.டி.ஏ.டி. சார்பாக மாநில ஹாக்கி லீக் போட்டி சென்னையில் எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடத்தப்பட்டது. இதில் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை அணிக்கு ஒலிம்பியன் வி.பாஸ்கரன் பரிசு வழங்கியபோது எடுத்தபடம். அருகில் ஒலிம்பியன் பிலிப்ஸ், ஹாக்கி ஸ்டேடிய அதிகாரி கோபிநாதன், வெஸ்லி கிளப் தலைவர் எஸ்.ஆர். பாஸ்கரன் ஆகியோர் உள்ளனர். மற்றொரு படத்தில் ரன்னர் அப் ஆக வந்த திருச்சி அணி வீரர்களை படத்தில் காணலாம்.



# உலக சாம்பியன்

தமிழ் விளையாட்டு மாதமிருமுறை இதழ்

R.Dis.No.1984/09

பட்டம் - 3, போட்டி - 6

1. 7. 2012


## சந்தா விவரம்:

**1 வருட சந்தா ரூ.240.00**

சந்தா தொகையை டி.டி. அல்லது மணியார்டர் மூலம் ‘‘உலக சாம்பியன், சென்னை’’ என்ற பெயரில் எடுத்து உலக சாம்பியன் அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.


## அலுவலக முகவரி:

**உலக சாம்பியன்**

தமிழ் விளையாட்டு மாதமிருமுறை இதழ்

எண்.133, (பழைய எண்.93),

3வது மாடி, சைடன்ஹாம்ஸ் ரோடு,

பெரியமேடு, சென்னை-600003.

(எஸ்.டி.ஏ.டி.நேரு உள்விளையாட்டு அரங்க மெயின் கேட் எதிரில்)

ULAGACHAMPION

TAMIL SPORTS FORTNIGHTLY

New No.133, Old No.93, 3rd Floor,

Sydenhams Road, Periamet,

Chennai-600 003.

*ஈ-மெயில் முகவரி:*

ulagachampion@gmail.com,

ulagachampion@yahoo.com,

balu_balu20002001@yahoo.com


# உள்ளே.....


4 பக்கம் — ஸ்பெயின் ‘சாம்பியன்’

23 பக்கம் — ஒலிம்பிக் போட்டிக்கு கடினமாக உழைக்க வேண்டும்

28 பக்கம் — விம்பிள்டன்: நடால், ஷரபோவா வெளியேற்றம்



பக்கவடிவமைப்பு

Sara graphics



தொலைபேசி:

25393977

செல்பேசி:

94441 93977

90940 42200

# ஸ்பெயின்

கால்பந்து விளையாட்டில் உலக கோப்பை போட்டிக்கு அடுத்தபடியாக மிகவும் பிரபலமானது, யூரோ கோப்பை கால்பந்து போட்டியாகும். ஐரோப்பிய கண்டத்தை சேர்ந்த நாடுகள் மட்டும் பங்கேற்கும் இந்த போட்டி 4 ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. இதன்படி 14-வது யூரோ கோப்பை கால்பந்து போட்டியை போலந்து, உக்ரைன் நாடுகள் இணைந்து நடத்தின.

இந்த போட்டியில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டு `ஏ' பிரிவில் போலந்து, கிரீஸ், ரஷியா, செக் குடியரசு ஆகிய அணிகளும், `பி' பிரிவில் நெதர்லாந்து, டென்மார்க், ஜெர்மனி, போர்ச்சுகல் ஆகிய அணிகளும், `சி' பிரிவில் ஸ்பெயின், இத்தாலி, அயர்லாந்து, குரோஷியா ஆகிய அணிகளும், `டி' பிரிவில் உக்ரைன், சுவீடன், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய அணிகளும் இடம் பெற்றன.



# மீண்டும் சாம்பியன்

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோதின.


**முதல் நாள்**

போலந்து தலைநகர் வார்சா தேசிய ஸ்டேடியத்தில் கோலாகலமாக தொடக்க விழாவும், கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. அதைத் தொடர்ந்து தொடக்க ஆட்டத்தில் உள்ளூர் அணியான போலந்து, 2004-ம் ஆண்டு சாம்பியனான கிரீசை சந்தித்தது. உள்ளூர் ரசிகர்கள் பலமான ஆதரவு, கரகோஷத்துக்கு மத்தியில் களம் இறங்கிய போலந்து அணி 17-வது நிமிடத்தில் கோல் அடித்து அரங்கை அதிர வைத்தது. ராபர்ட் லெவான்டவ்ஸ்கி தலையால் முட்டி கோலாக்கினார்.

இதனைத்தொடர்ந்து ஆக்ரோஷமாக போராடிய கிரீஸ் அணி 51-வது நிமிடத்தில் பதில் கோல் திருப்பியது. அந்த அணியின் டிமிட்ரிஸ் சல்பின்கிடிஸ் 51-வது நிமிடத்தில் இந்த கோலை அடித்தார். இதையடுத்து முன்னிலை பெற இரு அணிகளும் தீவிர முயற்சியில் ஈடுபட்டன. ஆனால் பலன் இல்லை. முடிவில் 1க்கு-1 என்ற கோல் கணக்கில் இந்த பரபரப்பான ஆட்டம் டிராவில் முடிந்தது.

அதே நாளன்று ஏ பிரிவில் நடந்த 2-வது லீக் ஆட்டத்தில் ரஷியா மற்றும் -செக்.குடியரசு அணிகள் மோதின. ரஷிய வீரர்களின் அபாரமான ஆட்டத்தை தாக்குப்பிடிக்க





முடியாமல் செக் குடியரசு அணி தடுமாறியது. ஆட்டம் முழுவதும் ஆதிக்கம் செலுத்திய ரஷியா 4-க்கு1 என்ற கோல் கணக்கில் செக். குடியரசை வென்றது.

## 2வது நாள்

## 45 ஆண்டுக்கு பிறகு

## நெதர்லாந்தை வென்ற டென்மார்க்

போட்டியின் 2-வது நாளன்று நடந்த பி பிரிவு லீக் ஆட்டத்தில் நெதர்லாந்து- மற்றும் டென்மார்க் அணிகள் மோதின. 24-வது நிமிடத்தில் டென்மார்க் கின் மைக்கேல் கிரோன் டெலி, கோல் அடித்து தங்கள் அணிக்கு முன்னிலை பெற்றுத்தந்தார். முடிவில் டென்மார்க் அணி 1-க்கு0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்துக்கு அதிர்ச்சி அளித்தது. டென்மார்க் அணி நெதர்லாந்தை 45 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக தோற்கடித்தது. முன்னதாக 1967-ம் ஆண்டு ஐரோப்பிய கால்பந்து தகுதி சுற்றில் 3-க்கு2 என்ற கணக்கில் நெதர்லாந்து வென்றிருந்தது.

அதே நாளன்று நடந்த `பி' பிரிவு 2-வது லீக்கில் ஜெர்மனியும், போர்ச்சுகலும் மோதின. நட்சத்திர வீரர்களை கொண்ட ஜெர்மனி அணி, ஆட்டத்தின் பெரும்பகுதியை தங்களது கட்டுக்குள் வைத்திருந்தது. போர்ச்சுக்கலும் கடுமையாக போராடியது. 72-வது நிமிடத்தில், சக நாட்டவர் சமி கெதிரா கடத்தி கொடுத்த பந்தை முன்பகுதியில் நின்ற ஜெர்மனியின் மரியோ கோம்ப்ஸ் தலையால் முட்டி கோலாக்கினார். அதுவே அந்த அணியின் வெற்றி கோலாகவும் அமைந்தது. அதன் பிறகு இரு அணிகளாலும் கடைசி வரை கோல் ஏதும் அடிக்க முடியவில்லை. முடிவில் ஜெர்மனி அணி 1க்கு-0 என்ற கோல் கணக்கில் போர்ச்சுகலை தோற்கடித்தது.

## 3வது நாள்

## ஸ்பெயின் - இத்தாலி ஆட்டம் டிரா

3வது நாளன்று நடந்த `சி' பிரிவு லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் ஸ்பெயினும், இத்தாலியும் பலப்பரீட்சை நடத்தின. முதல் பாதியில் கோல் ஏதும் விழவில்லை. இதனால் பிற்பாதியில் இரு அணி வீரர்களும் ரொம்ப ஆக்ரோஷமாக ஆடினார்கள். 61-வது நிமிடத்தில் இத்தாலியின் டி நடாலி கோல் அடித்தார். ஆனால் அவர்களது மகிழ்ச்சியில் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. அடுத்த 3-வது நிமிடத்தில் ஸ்பெயினின் பேப்ரிகஸ் பதில் கோல் அடித்தார். இதன் பின்னர் கடைசி வரை முயன்றும் இரு அணி வீரர்களாலும் மேற்கொண்டு கோல் அடிக்க முடியவில்லை. முடிவில் இந்த ஆட்டம் 1-க்கு1 என்ற கணக்கில் டிராவில் முடிந்தது.

## குரோஷியா...அயர்லாந்து

அதே நாளன்று நடந்த `சி' பிரிவு லீக் ஆட்டத்தில் குரோஷியா- மற்றும் அயர்லாந்து அணிகள் மோதின. இந்த போட்டியில் அயர்லாந்தை விட குரோஷியாவின் கட்டுப்பாட்டில் தான் பந்து அதிக நேரம் இருந்தது. ஆட்டத்தின் 3-வது நிமிடத்தில் குரோஷிய அணி முதல் கோல் அடித்தது. கேப்டன் டரிஜோ ஸர்னா கொடுத்த பாஸை சக வீரர் மரியோ மாண்ட்சுகிச் தலையால் முட்டி அபாரமாக கோலாக்கினார்.

19-வது நிமிடத்தில் அயர்லாந்து அணி பதில் கோல் அடித்தது. இந்த அணி வீரர் செயின்ட் லிட்ஜெர் இந்த கோலை அடித்தார். 43-வது நிமிடத்தில் குரோஷியா அணி 2-வது கோலை போட்டது. அந்த அணி வீரர் ஜெலாவிச் இந்த கோலை அடித்தார். முதல் பாதியில் குரோஷியா அணி 2-க்கு1 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. பின் பாதி ஆட்டத்திலும் குரோஷிய அணி வீரர் மரியோ மாண்ட்சுகிச் 49-வது நிமிடத்தில் மற்றொரு கோல் அடித்தார். முடிவில் குரோஷியா அணி 3க்கு-1 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை தோற்கடித்தது.

## 4வது நாள்

## இங்கிலாந்து- பிரான்ஸ் 'டிரா'

4வது நாளன்று நடந்த `டி' பிரிவு லீக்



ஆட்டத்தில் இங்கிலாந்து மற்றும் -பிரான்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 30-வது நிமிடத்தில் கிடைத்த `பிரிகிக்‘ வாய்ப்பில் இங்கிலாந்து அணியின் கேப்டன் ஜெரார்ட் கோலை நோக்கி அடித்த பந்தை அந்த அணி வீரர் ஜொலோன் லெஸ்காட் அபாரமாக தலையால் முட்டி மின்னல் வேகத்தில் கோல் அடித்தார். அதன் பின்னர் பதில் கோல் திருப்ப பிரான்ஸ் அணி கடுமையாக போராடியது. இதன் பலனாய் 39-வது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் பிராங் ரிபெரி பாஸ் செய்து கொடுத்த பந்தை இடது பக்கம் இருந்து அபாரமாக திருப்பிய சக வீரர் சமிர் நஸ்ரி அசுர வேகத்தில் கோலுக்குள் திணித்தார். முதல் பாதி ஆட்டம் முடிவில் இரு அணிகளும் 1-க்கு1 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன. பின் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்க தீவிரம் காட்டினாலும் கோல் எதுவும் விழவில்லை. விறுவிறுப்பான இந்த ஆட்டம் 1-க்கு1 என்ற கோல் கணக்கில் `டிரா’வில் முடிந்தது.

### சுவீடனுக்கு அதிர்ச்சி தந்த உக்ரைன்

அதே நாளன்று `டி’ பிரிவில் நடந்த லீக் ஆட்டத்தில் தரவரிசையில் 17-வது இடம் வகிக்கும் சுவீடன், 52-ம் நிலை அணியான உக்ரைனை எதிர்கொண்டது. விறுவிறுப்பாக தொடங்கிய இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் கோல் ஏதும் விழவில்லை. பிற்பாதியில், 52-வது நிமிடத்தில் சுவீடன் கேப்டன் இப்ராகிமோவிச் கோல் அடித்து தங்கள் அணிக்கு முன்னிலை பெற்று தந்தார். ஆனால் அவர்களின் உற்சாகம் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. அடுத்த 3-வது நிமிடத்தில் உக்ரைன் மூத்த வீரர் ஆண்ட்ரி ஷிவ்சென்கோ தலையால் முட்டி பதில் கொல் திருப்பினார். 62-வது நிமிடத்தில் ஷிவ்சென்கோ இன்னொரு கோல் போட்டு, சுவீடனை அதிர்ச்சியில் உறைய வைத்தார். இதன் பின்னர் ஆட்டத்தை சமனுக்கு கொண்டு வர சுவீடன் எடுத்த தீவிர முயற்சிகளுக்கு இறுதிவரை பலன் கிடைக்கவில்லை. முடிவில் உக்ரைன் அணி 2-க்கு1 என்ற கோல் கணக்கில் சுவீடனை தோற்கடித்தது.

## 5வது நாள்

### செக்குடியரசு கிரீசை வீழ்த்தியது

5வது நாளன்று நடந்த `ஏ’ பிரிவு லீக் ஆட்டத்தில் செக். குடியரசு- மற்றும் கிரீஸ் அணிகள் மோதின. ஆட்டம் தொடங்கிய 3-வது நிமிடத்திலேயே செக். குடியரசின் பெட் ஜீராசெக் கோல் அடித்தார். அடுத்த 3-வது நிமிடத்தில், செக். குடியரசு மேலும் ஒரு கோல் அடித்து அசத்தியது. இந்த கோலை வாக்லாவ் பிளார் சூப்பராக அடித்தார். 2-வது பாதியில் கிரீஸ் வீரர்கள் மிகவும் ஆக்ரோஷமாக ஆடினர். 53-வது நிமிடத்தில் கிரீஸ் வீரர் ஜீகாஸ் ஒரு கோல் திருப்பினார். முடிவில் 2க்கு-1 என்ற கோல் கணக்கில் செக். குடியரசு அணி முதலாவது வெற்றி பெற்றது.

போலந்து ... -ரஷியா ஆட்டம் `டிரா’

அதே நாளன்று நடந்த `ஏ’ பிரிவு ஆட்டத்தில் ரஷியா மற்றும் -போலந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 37-வது நிமிடத்தில் ரஷிய வீரர் ஆலன் ஜாகோவ் முதல் கோலை தலையால் முட்டி கோலுக்குள் தள்ளினார். 57-வது நிமிடத்தில் போலந்து அணி பதில் கோல் திருப்பியது. அந்த அணியின் கேப்டன் ஜாகுப் பிளாஸ்சிகோவ்ஸ்கி இந்த கோலை அடித்தார். இதனால் 1-க்கு1 என்ற கோல் கணக்கில் சமநிலை ஏற்பட்டது. அதன் பின்னர் இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முயற்சிகள் கடைசி வரை கைகூடவில்லை. முடிவில் இந்த ஆட்டம் 1-க்கு1 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது.

## 6வது நாள்

### போர்ச்சுக்கல்-டென்மார்க்

`யூரோ’ கோப்பை கால்பந்து போட்டியின் 6வது நாளன்று நடந்த `பி’ பிரிவு லீக் சுற்றில் போர்ச்சுகல்-மற்றும் டென்மார்க் அணிகள் மோதின.

ஆட்டத்தின் 24-வது நிமிடத்தில் கார்னர் பகுதியில் இருந்து வந்த பந்தை போர்ச்சுகல் வீரர் பெப்பே தலையால் முட்டி பந்தை கோலுக்கு

திருப்பினார். 36-வது நிமிடத்தில் போர்ச்சுகல் அணி இன்னொரு கோல் போட்டு அசத்தியது. நானி அடித்து கொடுத்த பந்தை, முன்பகுதியில் நின்ற ஹெல்டர் போஸ்டிகா அதே வேகத்தில் லாவகமாக கோல் வலைக்குள் திருப்பினார். இதையடுத்து பதிலடி கொடுக்க டென்மார்க் வீரர்கள் தீவிரம் காட்டினர். 41-வது நிமிடத்தில் டென்மார்க்கின் பென்டிட்னெர் தலையால் முட்டி, கோல் வலைக்குள் பந்தை திணித்தார். இதனால் முதல் பாதியில் போர்ச்சுகல் 2க்கு-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

2-வது பாதியில் டென்மார்க் வீரர்களின் ஆட்டத்தில் அனல் பறந்தது. 80-வது நிமிடத்தில் டென்மார்க்கின் பென்டிட்னெர் மீண்டும் ஒரு கோல் போட்டு ஆட்டத்தை சமனுக்கு கொண்டு வந்தார். இதனால் ஆட்டம் டிராவில் முடியுமோ என்று எதிர்பார்த்த வேளையில், 87-வது நிமிடத்தில் போர்ச்சுகலின் மாற்று வீரராக இறங்கிய வரேலா கோல் அடித்து, அந்த அணிக்கு உயிர் கொடுத்தார். பரபரப்பான ஆட்டத்தின் முடிவில் போர்ச்சுகல் அணி 3-க்கு2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## ஜெர்மனிக்கு 2-வது வெற்றி

அதே நாளன்று நடந்த `பி' பிரிவு லீக் ஆட்டத்தில் ஜெர்மனி-நெதர்லாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 24-வது நிமிடத்தில் ஜெர்மனி வீரர் மரியோ கோம்ஸ் கோல் அடித்தார். சக வீரர் பாஸ்டியன் கடத்தி கொடுத்த பந்தை கோம்ஸ் லாவகமாக அடித்து கோலாக்கினார். 38-வது நிமிடத்தில் ஜெர்மனி அணி 2-வது கோலை போட்டது. இந்த முறையும் பாஸ்டியன், பாஸ் செய்த பந்தை மரியோ கோம்ஸ் கோலாக்கினார். முதல் பாதி ஆட்டத்தில் ஜெர்மனி அணி 2க்கு-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

பின் பாதி ஆட்டத்தில் நெதர்லாந்து அணி கோல் அடிக்க தீவிர முயற்சி மேற்கொண்டது. இதன் பலனாக இந்த அணி 73-வது நிமிடத்தில் பதில் கோல் திருப்பியது. அந்த அணி வீரர் ராபின் வான்பெர்சி இந்த கோலை அடித்தார். அதன் பின்னர் இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. முடிவில் ஜெர்மனி அணி 2க்கு-1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தியது. ஜெர்மனி அணி பெற்ற 2-வது வெற்றி இதுவாகும்.

## 7வது நாள்

## இத்தாலி - குரோஷியா ஆட்டம் `டிரா'

7வது நாளன்று நடந்த `சி' பிரிவு லீக் ஆட்டத்தில் முன்னாள் உலக சாம்பியன் இத்தாலியும், குரோஷியாவும் மோதின. இதில் தொடக்கத்தில் இத்தாலியின் கையே ஓங்கி இருந்தது. 39-வது நிமிடத்தில் கிடைத்த பிரீ கிக் வாய்ப்பில் இத்தாலியின் ஆண்ட்ரியா பிர்லோ கோல் அடித்தார்.

பிற்பாதியில் குரோஷியா வீரர்கள் துடிப்புடன் ஆடினர். 72-வது நிமிடத்தில் குரோஷிய வீரர் இவான் ஸ்டிரினிச் தட்டிக்கொடுத்த பந்தை, சக வீரர் மரிய மான்ட்சூகிச் கோலாக மாற்றி ஆட்டத்தை சமனுக்கு கொண்டு வந்தார். அதன் பிறகு மேற்கொண்டு கோல் ஏதும் விழவில்லை. முடிவில் ஆட்டம் 1-க்கு1 என்ற கணக்கில் டிராவில் முடிந்தது.

ஸ்பெயின் அயர்லாந்தை வெளியேற்றியது

அதே நாளன்று நடந்த `சி' பிரிவு லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் ஸ்பெயின் அணி, அயர்லாந்து அணியை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஸ்பெயின் அணியே ஆதிக்கம் செலுத்தியது. அயர்லாந்து அணியினருக்கு பந்து கிடைப்பதே அரிதான விஷயமாக இருந்தது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்பெயின் அணி முடிவில் 4க்கு-0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை தோற்கடித்தது. ஸ்பெயின் அணி தரப்பில் பெர்னாண்டோ டாரஸ் 4-வது மற்றும் 70-வது நிமிடத்தில் கோல் அடித்தார். டேவிட் சில்வா 49-வது நிமிடத்தில் கோல் அடித்தார். 83-வது நிமிடத்தில் செஸ்க் பாப்ரெகாஸ் கோல் அடித்தார்.

முதல் ஆட்டத்தில் 1க்கு3 என குரோஷியாவிடம் தோற்றிருந்த அயர்லாந்து தொடர்ந்து 2-வது தோல்வியை சந்தித்ததால், அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்து வெளியேறியது.

## 8வது நாள்

## ஸ்வீடன் வெளியேற்றம்

8வது நாளன்று நடந்த டி பிரிவு லீக் ஆட்டம் ஒன்றில் இங்கிலாந்து மற்றும் -ஸ்வீடன் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தின் 23-வது நிமிடத்தில் இங்கிலாந்து அணியின் கேர்ரல் கோல் அடித்து, அணிக்கு முன்னிலை பெற்றுத் தந்தார். முதல் பாதியில் கோல் அடிக்க கிடைத்த மேலும் சில வாய்ப்புகளை இரு அணியினரும் கோட்டைவிட்டனர். 2-வது பாதியில் ஸ்வீடன் வீரர் மெல்பெர்க் 49-வது நிமிடத்திலும், 59-வது நிமிடத்திலும் கோல் அடித்து திடீரென ஸ்வீடன் அணிக்கு முன்னிலை பெற்றுத்தந்தார். இங்கிலாந்து அணியினர் அடுத்த 5 நிமிடங்களில் பதில் கோல் அடித்து மீண்டும் சமன் செய்தனர். இம்முறை கோல் அடித்தவர் இங்கிலாந்தின் வால்கோட். 78-வது நிமிடத்தில் வால்கோட் கடத்தி கொடுத்த பந்தை கோலாக மாற்றிய வெல்பெக், இங்கிலாந்தை மீண்டும் 3க்கு 2 என முன்னிலை பெறவைத்தார். அதன் பிறகு இரு அணி வீரர்கள் மேலும் கோல் அடிக்க முயன்றாலும், அவர்களது முயற்சி தடுக்கப்பட்டதால் இங்கிலாந்து அணி 3க்கு-2 என்ற கோல் கணக்கில் வெற்றி

பெற்றது. இதுவரை தான் ஆடிய இரண்டு ஆட்டங்களிலும் தோற்றிருந்த ஸ்வீடன் அணி டி பிரிவு அணிகளில் முதல் அணியாக தொடரிலிருந்து வெளியேறியது.

அதே நாளன்று நடந்த மற்றொரு டி பிரிவு லீக் ஆட்டத்தில் பிரான்ஸ் அணி, உக்ரைன் அணியை எதிர்கொண்டது. ஆட்டத்தின் முதல் பாதியில் கோல் அடிக்க இரு அணியினரும் மேற்கொண்ட முயற்சிகள் பலிக்கவில்லை. ஆனால் இரண்டாவது பாதியில் பிரான்ஸ் அணியினரின் விடாமுயற்சி நல்ல பலனைத் தந்தது. இதன்விளைவாக ஆட்டத்தின் 52-வது நிமிடத்தில் பிரான்ஸ் அணியின் ஜெரமி மெனெஸ் கோல் அடித்தார். அடுத்த 3 நிமிடங்களில் பிரான்ஸ் வீரர் யோகன் கபயே சிறப்பாக கோல் அடித்தார். இதனால் பிரான்ஸ் அணி 2க்கு-0 என்ற முன்னிலையைப் பெற்றது. இதன்பின்னர் கோல் அடித்து ஆட்டத்தை சமன் செய்ய உக்ரைன் வீரர்கள் முயன்றனர். ஆனால் பிரான்ஸ் வீரர்கள் தடுப்பாட்டத்தில் ஈடுபட்டதால், உக்ரைன் அணியினரால் கோல் அடிக்க முடியாமல் போனது. இறுதியில் பிரான்ஸ் அணி 2க்கு-0 என்ற கோல் கணக்கில் உக்ரைனை வென்றது.

## 9வது நாள்

9வது நாளன்று `ஏ' பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் செக். குடியரசு, போலந்து அணியுடன் மோதின. இதில் செக். குடியரசு 1-க்கு0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டத்தின் 72-வது நிமிடத்தில் செக். குடியரசு வீரர் பீட்டர் ஜீராக் இந்த கோலை அடித்தார். இந்த வெற்றி மூலம் செக்குடியரசு கால்இறுதிக்கு தகுதி பெற்றது. அந்த அணி பெற்ற 2-வது வெற்றியாகும். ஏற்கனவே கிரீஸ் அணியை வென்று இருந்தது. ரஷியாவிடம் தோற்று இருந்தது. இந்த தோல்வி மூலம் போலந்து போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டது. அந்த அணியால் ஒரு வெற்றிகூட பெற முடியாமல் போனது ஏமாற்றமே.

கிரீசிடம் ரஷ்யா அதிர்ச்சி தோல்வி

அதே நாளன்று இதே பிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் ரஷியா- மற்றும் கிரீஸ் அணிகள் மோதின. இதில் யாருமே எதிர்பார்க்காத வகையில் ரஷிய அணி அதிர்ச்சிகரமாக தோற்றது. முன்னாள் சாம்பியனான கிரீஸ் 1க்கு-0 என்ற கோல் கணக்கில் ரஷியாவை வீழ்த்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றது. கிரீஸ் வீரர் கார்கோனிஸ் இந்த


உலக சாம்பியன் விளம்பரக் கட்டணம்

வண்ணக் கலர்

| | | |
|---|---|---|
| பின் பக்கம் முழு அட்டை (ரேப்பர்) | - | 15,000 |
| உள் பக்கம் முழு அட்டை (ரேப்பர்) | - | 13,000 |
| உள் பக்கம் முழு பக்கம் | - | 10,000 |
| உள் பக்கம் அரை பக்கம் | - | 5,000 |

கறுப்பு வெள்ளை

| | | |
|---|---|---|
| உள் பக்கம் முழு பக்கம் | - | 8,000 |
| உள் பக்கம் அரை பக்கம் | - | 4,000 |

தொடர்புக்கு
உலக சாம்பியன்
தமிழ் விளையாட்டு மாதமிருமுறை இதழ்
எண்.133, (பழைய எண்.93), 3வது மாடி,
சைடன்ஹாம்ஸ் ரோடு, பெரியமேடு, சென்னை-600003.
(எஸ்.டி.ஏ.டி.நேரு உள்விளையாட்டு அரங்க மெயின் கேட் எதிரில்)

ஈமெயில் முகவரி:
ulagachampion@gmail.com,
ulagachampion@yahoo.com,
balu_balu20002001@yahoo.com

தொலைபேசி:
25393977

செல்பேசி:
94441 93977
90940 42200

கோலை அடித்தார். `ஏ' பிரிவில் செக்குடியரசு 2 வெற்றி, 1 தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று முதலிடத்தை பிடித்து கால் இறுதியில் நுழைந்தது. கிரீஸ், ரஷியா அணிகள் ஒரு வெற்றி, ஒரு டிரா, ஒரு தோல்வியுடன் 4 புள்ளிகள் பெற்று சமநிலையில் இருந்தன. கோல்கள் அடிப்படையில் ரஷியா முன்னிலை வகித்தாலும் இரு அணிகள் இடையேயான போட்டியில் கிரீஸ் வெற்றி பெற்று இருந்தது.

இதனால் அந்த அணி 2-வது இடத்தை பிடித்து கால் இறுதிக்கு தகுதி பெற்றது. ரஷியா 3-வது இடத்தை பிடித்து வெளியேறியது.

## 10வது நாள்

## நெதர்லாந்து பரிதாப தோல்வி

யூரோ கோப்பை கால்பந்து போட்டியின் 10வது நாளன்று பி பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் நெதர்லாந்து மற்றும் -போர்ச்சுக்கல் அணிகள் மோதின. ஆட்டத்தின் 11-வது நிமிடத்தில் நெதர்லாந்து அணி முதல் கோலை அடித்தது. அந்த அணியின் வான்டர் வாரட் இந்த கோலை அடித்தார். இதற்கு போர்ச்சுக்கல் அணியின் கேப்டனும், ரியல் மாட்ரிட் கிளப் வீரருமான கிறிஸ்டியானோ ரொனால்டோ பதிலடி கொடுத்தார். அவர் 24-வது நிமிடத்தில் கோல் அடித்து சமன் செய்தார்.

முதல் பாதி ஆட்டத்தில் 1-க்கு1 என்ற சமநிலை ஏற்பட்டது. 74-வது நிமிடத்தில் ரொனால்டோ 2-வது கோலை அடித்தார். ஆட்டத்தில் இறுதிவரை நெதர்லாந்து அணியில் 2-வது கோலை அடித்து சமன் செய்ய முடியவில்லை. இதனால் போர்ச்சுக்கல் அணி 2க்கு 1 என்ற கோல்களில் வெற்றி பெற்றது.

நெதர்லாந்து தான் மோதிய 3 ஆட்டத்திலும் தோற்று போட்டியில் இருந்து வெளியேறியது. அந்த அணி ஏற்கனவே 0க்கு-1 என்ற கணக்கில் டென்மார்க்கிடமும், 1-க்கு2 என்ற கணக்கில் ஜெர்மனியிடமும் தோற்றது.

## ஜெர்மனி ஹாட்ரிக் வெற்றி

அதே நாளன்று இதே பிரிவில் நடந்த மற்றொரு லீக் ஆட்டத்தில் 3 முறை சாம்பியனான ஜெர்மனி அணியும், டென்மார்க் அணியும் மோதின. ஜெர்மனி அணியில் லுகாஸ் பொடோல்ஸ்கியும் (19-வது நிமிடம்) பெண்டரும் (80-வது நிமிடம்), டென்மார்க் தரப்பில் குரோன் டெல்லியும் (24-வது நிமிடம்) கோல் அடித்தனர்.

ஜெர்மனி அணி தொடர்ந்து 3-வது வெற்றியை பெற்று ஹாட்ரிக் சாதனை புரிந்தது. அந்த அணி தொடக்க ஆட்டத்தில் 1-0 என்ற கணக்கில் போர்ச்சுக்கலையும் 2-1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தையும் தோற்கடித்தது.

பி பிரிவில் ஜெர்மனி 3 வெற்றியுடன் 9 புள்ளிகள் பெற்று முதல் இடத்தையும், போர்ச்சுக்கல் 2 வெற்றி ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று 2-வது இடத்தையும் பிடித்தன. முதல் 2 இடங்களை பிடித்த ஜெர்மனி, போர்ச்சுக்கல் அணிகள் கால்இறுதிக்கு தகுதி பெற்றன.

டென்மார்க் (ஒரு வெற்றியுடன், 3 புள்ளி) 3-வது இடத்தையும், நெதர்லாந்து வெற்றி எதுவும் பெறாமல் கடைசி இடத்தையும் பிடித்து போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டன. கடந்த உலக கோப்பையில் 2-வது இடத்தை பிடித்த நெதர்லாந்து- ஐரோப்பிய கோப்பை போட்டியில் முதல் சுற்றிலேயே வெளியேறியது மிகவும் பரிதாபமே.

## 11வது நாள்

## ஸ்பெயின், இத்தாலி காலிறுதிக்கு தகுதி

யூரோ கோப்பை கால்பந்து போட்டியின் 11வது நாளன்று `சி' பிரிவில் நடந்த கடைசி லீக்கில் நடப்பு சாம்பியன் ஸ்பெயினும், குரோஷியாவும் மோதின. வெற்றி பெற வேண்டும் அல்லது குறைந்தது `டிரா'வாவது செய்ய வேண்டும் என்ற நோக்குடன் இவ்விரு அணிகளும் களம் புகுந்தன.

ஆட்டம் துவங்கியது முதல் முடிவை நெருங்கும்



சோகத்தில் இத்தாலி ரசிகர்கள்




வரை இரு அணி வீரர்களும் கோலடிக்க கடுமையாக போராடினர். ஆனால் பலன் இல்லாமல் போய் விடுமோ என்ற நிலையில், ஆட்ட நேரம் முடிய 2 நிமிடம் மட்டுமே இருந்த சமயத்தில், குரோஷியாவின் தடுப்பு அரணை ஸ்பெயின் வெற்றிகரமாக உடைத்தது. இனியஸ்டா கடத்தி கொடுத்த பந்தை ஸ்பெயின் வீரர் ஜீசஸ் நவாஸ் (88-வது நிமிடம்), கோல் கீப்பர் இன்றி வெற்றிடமாக கிடந்த வலைக்குள் பந்தை அடித்து மிக சுலபமாக கோலாக மாற்றினார். இவர் 61-வது நிமிடத்தில் டோரசுக்கு பதிலாக இறங்கிய மாற்று வீரர் ஆவார். முடிவில் உலக சாம்பியன் ஸ்பெயின் அணி 1க்கு-0 என்ற கோல் கணக்கில் குரோஷியாவை தோற்கடித்து கால்இறுதிக்குள் நுழைந்தது.

அதே நாளன்று நடந்த மற்றொரு ஆட்டத்தில் முன்னாள் உலக சாம்பியன் இத்தாலியும், அயர்லாந்தும் மோதின. கட்டாயம் வென்றாக வேண்டிய நெருக்கடியுடன் இத்தாலி வீரர்கள் இறங்கினர். எதிர்பார்த்தது போலவே பலம் வாய்ந்த இத்தாலியே தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. 35-வது நிமிடத்தில் இத்தாலியின் ஆன்டோனியா காஸ்சனோ தலையால் முட்டி கோல் வலைக்குள் திருப்பினார்.

இதனால் முதல் பாதியில் இத்தாலி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் (90-வது நிமிடத்தில்) இத்தாலியின் மாற்று வீரர் மரியோ பலோடெலி, சூப்பராக உதைத்து கோலாக்கினார். இறுதியில் இத்தாலி 2-க்கு0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை வென்றது. இந்த வெற்றி மூலம் இத்தாலி காலிறுதிக்கு தகுதி பெற்றது. அயர்லாந்து போட்டியிலிருந்து வெளியேறியது.

## 12வது நாள்

## இங்கிலாந்து, பிரான்ஸ் காலிறுதிக்கு தகுதி

12வது நாளன்று நடந்த `டி' பிரிவு ஆட்டம் ஒன்றில் இங்கிலாந்து- மற்றும் உக்ரைன் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. ஆட்டத்தில் அதிக நேரம் பந்து உக்ரைன் அணி வசம் இருந்தாலும் இங்கிலாந்து அணி 48-வது நிமிடத்தில் முதல் கோல் அடித்தது. இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் வெய்ன் ரூனி மின்னல் வேகத்தில் தலையால் முட்டி கோலாக்கினார்.

பின்னர் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க எடுத்த முயற்சி பலிக்கவில்லை. முடிவில் இங்கிலாந்து அணி 1-க்கு0 என்ற கோல் கணக்கில் போட்டியை நடத்தும் உக்ரைனை வீழ்த்தி போட்டியிலிருந்து வெளியேற்றியது. 2-வது வெற்றியை பெற்ற இங்கிலாந்து அணி முதலிடம் பிடித்து கால் இறுதிக்கு முன்னேறியது.

அதே நாளன்று நடந்த மற்றொரு டி பிரிவு ஆட்டத்தில் சுவீடன் மற்றும் -பிரான்ஸ் அணிகள் மோதின. முதல் இரண்டு ஆட்டத்தில் தோல்வி கண்டு இருந்த சுவீடன் அணி, முன்னாள் சாம்பியன் பிரான்ஸ் அணிக்கு சவால் அளிக்கும் விதத்தில் விளையாடியது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சுவீடன் அணி 2க்கு-0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணியை வீழ்த்தியது. 54-வது நிமிடத்தில் சுவீடன் வீரர் இப்ராகிம் மோவிக்குகம், கடைசி நிமிடத்தில் லார்சனும் கோலடித்தனர்.

இந்த ஆட்டத்தில் தோற்றாலும், பிரான்ஸ் அணி ஏற்கனவே ஒரு வெற்றி, ஒரு டிரா கண்டு இருந்ததன் மூலம் 4 புள்ளிகள் பெற்று 2-வது

பள்ளிகள் முதல் சர்வதேச போட்டிகள் வரை அனைத்து வகையான விளையாட்டு செய்திகளையும் தாங்கி வரும் உலக சாம்பியன் மாதமிருமுறை இதழை வாசித்து நல்லாதரவை அளித்துவரும் வாசகர்களுக்கு நன்றி.

உலக சாம்பியன் எந்தவிதத் தடையுமின்றி, மாதமிருமுறை உங்கள் வீடு மற்றும் அலுவலகம் தேடி வர ரூ.240(ஆண்டு சந்தா) மட்டுமே செலுத்தி சந்தாதாரர் ஆகலாம்.

இதுவரை சந்தாதாரர் ஆகாத வாசகர்களும், இன்றே இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து, உலக சாம்பியன் நேரடியாக உங்கள் விலாசத்திற்கே வந்து சேரும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

ரூ. 240

அனுப்ப வேண்டிய முகவரி:

உலக சாம்பியன்

எண்.133, (பழைய எண் 98), 3வது மாடி,
சைடன்ஹாம்ஸ் சாலை,
பெரியமேடு, சென்னை 600003.
செல்போன்: 94441 93977, 044-25393977

## சந்தா படிவம்

உலக சாம்பியன்

ஆண்டு சந்தா ரூ.240.

பெயர் :

முகவரி :

மாவட்டம் :

பின்கோடு :

(கண்டிப்பாக குறிப்பிட வேண்டும்)

தொலைபேசி/செல்போன் :

காசோலை/டி.டி.விவரம் ;

எண்: வங்கி: தொகை:

**உங்கள் பள்ளி, கல்லூரி, ஊரில் நடைபெறும் விளையாட்டு செய்திகளும், வாசகர்களிடம் இருந்து விளையாட்டு தொடர்பான சுவையான செய்திகளும், கட்டுரைகளும் வரவேற்கப்படுகின்றன.**

**...ஆசிரியர்.**

இடத்துடன் கால் இறுதிக்குள் நுழைந்தது. ஆறுதல் வெற்றியுடன் சுவீடன் அணி வெளியேறியது.

## 13வது நாள்

## அரையிறுதிக்குள் போர்ச்சுக்கல்

14-வது யூரோ கோப்பை கால்பந்து போட்டியின் லீக் சுற்று முடிவில் செக். குடியரசு, கிரீஸ், ஜெர்மனி, போர்ச்சுகல், ஸ்பெயின், இத்தாலி, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய அணிகள் கால் இறுதிக்கு முன்னேறின. ரஷியா, போலந்து, டென்மார்க், நெதர்லாந்து, குரோஷியா, அயர்லாந்து, உக்ரைன், சுவீடன் ஆகிய நாடுகள் அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து வெளியேறின.

போட்டியின் 13வது நாளன்று நடந்த முதலாவது கால் இறுதியில் `ஏ' பிரிவில் முதலிடம் பிடித்த செக்குடியரசு அணியும் - `பி' பிரிவில் 2-வது இடம் பெற்ற போர்ச்சுகல் அணியும் சந்தித்தன. ஆட்டத்தில் தொடக்கம் முதலே போர்ச்சுகல் அணியினரின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. போர்ச்சுகல் அணியினர் எதிரணி கோல் எல்லையை முற்றுகையிட்டு தாக்குதல் ஆட்டம் நடத்தினாலும், செக். குடியரசு பின்கள வீரர்கள் பலவாய்ப்புகளை கோலாக்க விடாமல் தடுப்பு அரண் அமைத்து தடுத்தனர். இதனால் முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை.

பின்பாதி ஆட்டத்தில், 79-வது நிமிடத்தில் போர்ச்சுகல் அணியின் கேப்டனும், நட்சத்திர வீரருமான கிறிஸ்டியானோ ரொனால்டோ கோல் அடித்தார். ஜோ மவ்டினோ அடித்த பந்தை ரொனால்டோ தலையால் மின்னல் வேகத்தில் முட்டி கோலாக்கினார். செக்குடியரசு அணி கோல் திருப்ப எடுத்த முயற்சி கடைசி வரை பலிக்கவில்லை.

முடிவில் போர்ச்சுகல் அணி 1க்கு-0 என்ற கோல் கணக்கில் செக். குடியரசை வீழ்த்தி 4-வது முறையாக அரைஇறுதிக்குள் நுழைந்தது.

## 14வது நாள்

## அரை இறுதிக்கு முன்னேறியது ஜெர்மனி

14வது நாளன்று நடந்த இரண்டாவது கால் இறுதி ஆட்டத்தில் 3 முறை சாம்பியன் பட்டம் வென்ற ஜெர்மனி அணி, முன்னாள் சாம்பியன் கிரீஸ் அணியை எதிர்கொண்டது.

ஜெர்மனி அணி தனது 3 லீக் ஆட்டத்திலும் வெற்றி பெற்று `பி' பிரிவில் முதலிடம் பிடித்தது. கிரீஸ் அணி ஒரு வெற்றி, ஒரு தோல்வி, ஒரு டிராவுடன் `ஏ' பிரிவில் 2-வது இடம் பிடித்து கால் இறுதிக்குள் நுழைந்தது. எதிர்பார்த்தது போல் ஜெர்மனி அணியின் ஆதிக்கமே ஆட்டத்தில் மேலோங்கி இருந்தது. 39-வது நிமிடத்தில் ஜெர்மனி அணி முதல் கோல் அடித்தது. மெசுத் ஒசில் கடத்தி கொடுத்த பந்தை கேப்டன் பிலிப் லாம் கோலுக்குள் திணித்தார். முதல் பாதியில் ஜெர்மனி அணி 1-க்கு0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

56-வது நிமிடத்தில் கிரீஸ் அணி பதில் கோல் அடித்தது. அந்த அணி வீரர் சாம்ராஸ் இந்த கோலை அடித்தார். இதனால் 1க்கு-1 என்ற கோல் கணக்கில் சமநிலையை எட்டியது.

பின்னர் ஜெர்மனி அணி வீரர்கள் சமி கேதிரா 61-வது நிமிடத்திலும், மிரோஸ்லாவ் குளோஸ் 68-வது நிமிடத்தில் தலையால் முட்டியும், மார்கோ ராஸ் 74-வது நிமிடத்திலும் கோல் அடித்தனர். இதனால் ஜெர்மனி அணி 4-க்கு1 என்ற கோல் கணக்கில் வலுவான முன்னணி பெற்றது.

ஆட்டம் முடிய ஒரு நிமிடம் இருந்தபோது, கிரீஸ் அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பில் சல்பிங்கிடிஸ் கோல் அடித்தார்.

முடிவில் ஜெர்மனி அணி 4-க்கு2 என்ற கோல் கணக்கில் கிரீசை தோற்கடித்து 8-வது முறையாக அரை இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

## 15வது நாள்

## அரை இறுதிக்குள் நுழைந்தது ஸ்பெயின்

15வது நாளன்று நடந்த 3-வது கால் இறுதி ஆட்டத்தில் `சி' பிரிவில் முதலிடம் பிடித்த நடப்பு சாம்பியனான ஸ்பெயின் அணி, `டி' பிரிவில் 2-வது இடம் பெற்ற பிரான்ஸ் அணியை சந்தித்தது. ஸ்பெயின் அணி தொடக்கம் முதலே தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டது. இதன்பலனாக 19-வது நிமிடத்தில் ஸ்பெயின் அணி முதல் கோல் அடித்தது. ஆந்த்ரே இனியஸ்டா கோலை நோக்கி அடித்த பந்தை ஷபி அலோன்சா தலையால் முட்டி கோலாக்கினார். முதல் பாதியில் ஸ்பெயின் அணி 1க்கு-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

பின்பாதி ஆட்டத்திலும் கோல் அடிக்க பிரான்ஸ் அணியினர் கடுமையாக போராடினார்கள். ஆனால் ஸ்பெயின் அணியின் சிறப்பான தடுப்பு ஆட்டத்தை தாண்டி அவர்களால் கோல் அடிக்க கடைசி வரை முடியவில்லை.

ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் ஸ்பெயின் அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பில் ஸ்பெயின் வீரர் ஷபி அலோன்சா 2-வது கோலை அடித்தார். முடிவில் ஸ்பெயின் அணி 2க்கு-0 என்ற கோல் கணக்கில் பிரான்சை வீழ்த்தி 4-வது முறை யாக அரை இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

## 16வது நாள்

## இத்தாலி அணி அரை இறுதிக்கு தகுதி

16வது நாளன்று நடந்த கடைசி கால் இறுதி ஆட்டத்தில் `டி' பிரிவில் முதலிடம் பிடித்த இங்கிலாந்து அணி, `சி' பிரிவில் 2-வது இடம் பெற்ற இத்தாலியை எதிர்கொண்டது. இத்தாலி

அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. பின் பாதி ஆட்டத்திலும் இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முயற்சிகளுக்கு பலன் கிடைக்கவில்லை. இதனால் ஆட்ட நேரம் முடிவில் இரு அணிகளும் கோல் எதுவுமின்றி சம நிலையில் இருந்தன. இதனால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இரண்டு 15 நிமிட கூடுதல் நேரத்திலும் இரு அணிகளாலும் கோல் எதுவும் போட முடியவில்லை. எனவே வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க பெனால்டி ஷூட்-அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. பெனால்டி ஷூட்டில் இத்தாலி அணி 4-க்கு2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தி 5-வது முறையாக அரை இறுதிக்குள் நுழைந்தது.

பெனால்டி ஷூட்டில் இத்தாலி வீரர்கள் மரியோ பலோடெலி, பிர்லோ, நோசெரினோ, டிமான்டி ஆகியோர் கோல் அடித்தனர். மன்டோலியா வாய்ப்பை தவறவிட்டார். இங்கிலாந்து அணியில் ஜெரார்டு, ரூனி ஆகிய இருவர் மட்டுமே கோல் அடித்தனர். ஆஷ்லே யங், ஆஷ்கோ கோலே ஆகியோர் வாய்ப்பை தவறவிட்டனர்.

## 17வது நாள்

## இறுதிப்போட்டிக்கு முன்னேறியது ஸ்பெயின்

யூரோ கோப்பை கால்பந்து போட்டியின் 17வது நாளன்று முதலாவது அரை இறுதி ஆட்டம் உக்ரைன் நாட்டில் உள்ள டான்ட்ஸ்க் நகரில் நடந்தது. இதில் நடப்பு சாம்பியன் ஸ்பெயின் அணி, போர்ச்சுகலை சந்தித்தது. இரு அணியினரும் ஒருவொருக்கொருவர் சளைத்தவர் இல்லை என்பது போல் பந்தை மாறி, மாறி தங்கள் வசப்படுத்தியதுடன் எதிரணியின் கோல் எல்லையை நோக்கி முற்றுகையிட்டனர். ஆனால் இரு அணிகளின் பின்கள வீரர்களும், கோல்கீப்பர்களும் தடுப்பு அரணை சிறப்பாக அமைத்து கோல் அடிக்கும் முயற்சிகளை தடுத்தனர்.

ஸ்பெயின் வீரர் இனியஸ்டா 10-வது மற்றும் 29-வது நிமிடங்களில் கோலை நோக்கி அடித்த பந்து கோல் கம்பத்தின் மேல் பகுதி தாண்டி வெளியேறியது. 31-வது நிமிடத்தில் ப்ரீ கிக் வாய்ப்பை பயன்படுத்தி போர்ச்சுகல் கேப்டன் கிறிஸ்டியானோ ரொனால்டோ அடித்த பந்து மயிரிழையில் கோல் கம்பத்தை விட்டு விலகி சென்றது. இரு அணியினரும் மாறி மாறி பந்துடன் முன்னேறினாலும், பந்து அதிக நேரம் ஸ்பெயின் அணியின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

பின் பாதி ஆட்டத்திலும் தொடர்ந்து விறுவிறுப்பு நிலவியது. இருப்பினும் கோல் எதுவும் விழவில்லை. ஆட்ட நேரம் முடிவில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் கூடுதல் நேரமாக 30 நிமிடம் அளிக்கப்பட்டது. அதிலும் கோல் முயற்சிகளுக்கு பலன் கிடைக்கவில்லை. கூடுதல் நேரம் முடிவிலும் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க பெனால்டி ஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது.

பெனால்டி ஷூட் அவுட் முறைக்கான முதல் வாய்ப்பில் ஸ்பெயின் வீரர் ஷபி அலோன்சா அடித்த பந்தை போர்ச்சுகல் கோல் கீப்பர் பெட்ரிகோ கையால் தடுத்து வெளியேற்றினார். இதே போல் போர்ச்சுகல் வீரர் ஜாவோ மவுடின்கோ அடித்த பந்தை, ஸ்பெயின் கோல் கீப்பர் கேசில்லாஸ் தடுத்து நிறுத்தினார். 2-வது வாய்ப்பில் ஸ்பெயின் அணியில் இனியஸ்டாவும், போர்ச்சுகல் அணியில் பெபேயும் கோலாக்கினர். இதனால் 1-க்கு 1 என்ற கோல் கணக்கில் சமநிலை ஏற்பட்டது. 3-வது வாய்ப்பில் ஸ்பெயின் அணியில் ஜெரார்டு பிகேயும், போர்ச்சுகல் அணியில் நானியும் கோல் அடித்தனர். இதனால் 2-க்கு2 என்ற கோல் கணக்கில் சமநிலை நிலவியது.

4-வது வாய்ப்பில் ஸ்பெயின் வீரர் செர்ஜியோ ரமோஸ் கோல் அடித்தார். போர்ச்சுகல் வீரர் புருனோ ஆல்வ்ஸ் பந்தை கோல் கம்பத்தில் அடித்து வாய்ப்பை நழுவ விட்டார். இதனால் ஸ்பெயின் அணி 3-க்கு2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இதையடுத்து 5-வது மற்றும் கடைசி வாய்ப்பில் ஸ்பெயின் வீரர் பேப்ரிகஸ் கோல் அடித்தார். பேப்ரிகஸ் அடித்த கோலின் மூலம் ஸ்பெயின் அணி 4-க்கு2 என்ற கோல் கணக்கில் போர்ச்சுகலை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. போர்ச்சுகல் அணியின் 5-வது பெனால்டி வாய்ப்பை நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அடிப்பதாக இருந்தது. அதனால் பயன் எதுவும் இல்லாததால் அவர் அதனை அடிக்கவில்லை.

தொடர்ந்து 3 முறை நடப்பு உலக சாம்பியனும், யூரோ கோப்பை நடப்பு சாம்பியனுமான ஸ்பெயின் அணி தொடர்ந்து 3-வது தடவையாக பெரிய போட்டியில் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. இதற்கு முன்பு 1970-களில் மேற்கு ஜெர்மனி அணி இதேபோல் தகுதி பெற்று இருந்தது. அந்த சாதனையை ஸ்பெயின் சமன் செய்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

## 18வது நாள்

## இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது இத்தாலி

18வது நாளன்று 2-வது அரைஇறுதி ஆட்டம் போலந்து தலைநகர் வார்சாவில் நடந்தது. இதில் ஜெர்மனி மற்றும் இத்தாலி அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

தாக்குதல் ஆட்டத்திற்கு பெயர் போன ஜெர்மனி அணி வீரர்கள் தொடக்கத்தில் இருந்தே

ஆக்ரோஷமாக ஆடினர். 5-வது நிமிடத்திலேயே ஜெர்மனி கோல் கணக்கை தொடங்கியிருக்க வேண்டியது. ஆனால் பொன்னான வாய்ப்பு நூலிழையில் நழுவி போனது. அந்த அணியின் மேட்ஸ் ஹம்மெல்ஸ் கோல் நோக்கி அடித்த பந்து, இத்தாலி கோல் கீப்பர் ஜியான்லூகி பப்பனை தாண்டி சென்றது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக கோல் கம்பம் அருகில் நின்ற இத்தாலி யின் ஆண்ட்ரீயோ பிர்லோ பந்தை தடுத்து நிறுத்தி தங்கள் அணியை காப்பாற்றினார். இதைத் தொடர்ந்து 13-வது நிமிடத்தில் ஜெர்மனியின் குரூஸ் இலக்கை நோக்கி அடித்த ஷாட்டை, இத்தாலி கோல் கீப்பர் பப்பன் தடுத்தார்.

இதன் பிறகு வீறுகொண்டு எழுந்த இத்தாலி அணி வீரர்கள் 17 மற்றும் 18-வது நிமிடத்தில் அடுத்தடுத்து ஜெர்மனியின் கோல் பகுதியை முற்றுகையிட்டனர். இரு ஷாட்டுகளை முறியடித்த ஜெர்மனி கோல் கீப்பர் மானுவேல் யரால், 20-வது நிமிடத்தில் அடிக்கப்பட்ட சக்திவாய்ந்த ஷாட்டுக்கு பதில் சொல்ல முடியவில்லை. இத்தாலியின் ஆண்டோனியா கேஸ்சனோ தட்டிக்கொடுத்த பந்தை, முன்பகுதியில் நின்ற சக வீரர் மரியோ பலோடெலி மின்னல் வேகத்தில் தலையால் முட்டி கோலாக்கினார். பதில் கோல் திருப்ப 27-வது நிமிடத்தில் மெசூத் ஒசிலும், 35-வது நிமிடத்தில் கேதிராவும் கோல் நோக்கி உதைத்த பந்துகளை பப்பன் சூப்பராக மடக்கினார்.

36-வது நிமிடத்தில் ஜெர்மனிக்கு 2-வது அதிர்ச்சி காத்திருந்தது. ஜெர்மனி அணி வீரர்கள் அனைவரும் எதிரணி கோல்பகுதியின் முற்றுகையில் இருந்து விடுபடுவதற்குள், அங்கிருந்து இத்தாலியின் ரிக்கார்டோ மோன்டாலிவோ அடித்து கொடுத்த பந்தை தனிநபராக பலோடெலி கடத்தி கொண்டு, ஜெர்மனியின் கோல் நோக்கி ஜெட் வேகத்தில் முன்னேறினார். ஜெர்மனி கேப்டன் பிலிப் லாம் அவரிடம் இருந்து பந்தை பறிக்க முயற்சித்தார். ஆனால் அவரையும், கோல் கீப்பரையும் ஏமாற்றி பலோடெலி 2-வது கோலை லாவகமாக திணித்தார். 2-வது கோல் விழுந்ததும், ஜெர்மனி ரசிகர்களின் இதயமே நொறுங்கி போய் விட்டது. மைதானத்தில் குழுமியிருந்த பல ஜெர்மனி ரசிகர்கள் கண்ணீர் விட்டு அழுதனர். முதல் பாதியில் இத்தாலி 2க்கு-0 என்ற கணக்கில் வலுவான முன்னிலை பெற்றது.

0-க்கு2 என்று பின்தங்கியதால் பதற்றத் திற்குள்ளான ஜெர்மனி வீரர்கள் 2-வது பாதியில் ரொம்ப ஆவேசமாக ஆடினார்கள். என்றாலும் இத்தாலியின் வலுவான தடுப்பு வளையத்திற்குள் ஊடுருவி சென்று அவர்களால் கோல் போட இயலவில்லை. இத்தனைக்கும் இத்தாலியை விட இவர்களது வசமே பந்து அதிக நேரம் இருந்தது. 82-வது நிமிடத்தில் இத்தாலியின் 3-வது கோல் அடிக்கும் முயற்சி நழுவியது. இத்தாலியின் டி நடாலி தனிவீரராக கடத்திக் கொண்டு வந்த பந்தை வெளியே அடித்து வீணடித்து விட்டார். அடுத்த நிமிடத்தில் இத்தாலியின் பெர்டெரிகோ பல்ஸாரட்டி அடித்த கோல் `ஆப்-சைடு' என்று அறிவிக்கப்பட்டது.

இறுதியாக 90-வது நிமிடத்தில் ஜெர்மனி வீரர்கள் மீண்டும் ஒரு முறை இத்தாலியின் எல்லைக்குள் படையெடுத்தனர். ஆனால் இந்த முறையும் அவர்களது கோல் கனவை பப்பன் தகர்த்தெறிந்தார்.

இதையடுத்து 2-வது பாதியில் காயம் உள்ளிட்ட வகையில் விரயமாகும் நேரமாக கணக்கிடப்பட்டு 4 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இதன் 2-வது நிமிடத்தில் கோல் பகுதியில் வைத்து, இத்தாலியின் பின்கள வீரர் பல்ஸாரட்டியின் கையில் பந்து பட்டதால் ஜெர்மனிக்கு `பெனால்டி' வாய்ப்பு வழங்கப்பட்டது. இதனை மெசூத் ஒசில் கோலாக்கினார். இதனால் ஜெர்மனி வீரர்கள் எஞ்சிய இரு நிமிடங்களில் இன்னொரு கோல் அடித்து சமப்படுத்த உச்சக்கட்ட முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால், பலன் இல்லை.

பரபரப்பான ஆட்டத்தின் முடிவில் இத்தாலி அணி 2க்கு-1 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை தோற்கடித்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

நட்சத்திர பட்டாளங்களையும், துடிப்பான வீரர்களையும் உள்ளடக்கிய ஜெர்மனி அணியே இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டிருந்தது. ஆனால் இத்தாலியின் வலுவான தடுப்பு கோட்டையை உடைக்க முடியாததால் ஜெர்மனியின் கனவு சிதைந்தது.

யூரோ கோப்பை கால்பந்து இறுதிப்போட்டிக்கு முன்னேறிய ஸ்பெயின் மற்றும் இத்தாலி ஆகிய இரு அணிகளுமே லீக் சுற்றில் `சி' பிரிவில் இடம்பெற்றவை ஆகும். லீக் சுற்றில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 1க்கு-1 என்ற கணக்கில் `டிரா'வில் முடிந்தது குறிப்பிடத்தக்கது.

# ஸ்பெயின் 'சாம்பியன்'

யூரோ கோப்பை கால்பந்து திருவிழாவின் இறுதிப்போட்டி உக்ரைன் நாட்டின் தலைநகர் கீவ்வில் நடந்தது. இதில் நடப்பு சாம்பியன் ஸ்பெயின் அணி, முன்னாள் சாம்பியன் இத்தாலியை சந்தித்தது.



2008 - யூரோ கோப்பையுடன்



2012 - யூரோ கோப்பையுடன்

வழக்கமாக தடுப்பு ஆட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தும் ஸ்பெயின் அணி இறுதிப்போட்டியில் புதிய விகத்துடன் தொடக்கம் முதலே தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டது. இதன் பலனாக அந்த அணி வீரர்கள் இத்தாலி அணியின் கோல் எல்லையை அடுத்தடுத்து முற்றுகையிட்டனர்.

ஆட்டத்தின் 14-வது நிமிடத்தில் ஸ்பெயின் அணி முதல் கோல் அடித்தது. கோல் கம்பத்தின் வலதுபுறத்தில் இருந்து பேப்ரிகஸ் கோலை நோக்கி அடித்த பந்தை டேவிட் சில்வா மின்னல் வேகத்தில் பாய்ந்து தலையால் முட்டி கோலுக்குள் தள்ளினார்.

இந்த கோல் விழுந்ததும் பதில் கோல் திருப்ப இத்தாலி வீரர்கள் வேகமாக ஆடினார்கள். ஆனால் அவர்களின் முன்னேற்றத்திற்கு ஸ்பெயினின் பின்கள வீரர்களும், கேப்டனும், கோல் கீப்பருமான இகேர் கேசில்லாஸ் சிம்ம சொப்பணமாக திகழ்ந்தார். 16-வது நிமிடத்தில் இத்தாலி வீரர் ஆன்ட்ரீயா பிர்லோ பிரிகிக் மற்றும் கார்னர் வாய்ப்புகளை கோல்கீப்பர் கேசில்லாஸ் அபாரமாக தடுத்து நிறுத்தினார்.

41-வது நிமிடத்தில் ஸ்பெயின் அணி 2-வது கோல் அடித்து இத்தாலிக்கு கடும் அதிர்ச்சி அளித்தது. ஷவி ஹெர்னாண்டோ கொடுத்த அருமையான பாஸ்சை சக வீரர் ஜோர்டி ஆல்பா சிறிதும் தாமதிக்காமல் கோலுக்குள் அடித்தார். அவர் அடித்த முதல் சர்வதேச கோல் இதுவாகும். முதல் பாதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி 2க்கு-0 என்ற கணக்கில் வலுவான முன்னிலை பெற்றது.

பின் பாதியில் இத்தாலி அணி வீரர் டி நாதாலே 46-வது நிமிடத்தில் தலையால் முட்டி கோல் அடிக்க எடுத்த முயற்சி வீணானது. பின் பாதியில் ஸ்பெயின் அணியின் ஆதிக்கம் அதிகம் இருந்தது. 3 மாற்று ஆட்டக்காரர்களை களம் இறக்கிய பின்னர் இத்தாலி வீரர் தியாகோ மோட்டோ காயம் அடைந்து வெளியேறியதால் இத்தாலி அணி கடைசி 25 நிமிடங்கள் 10 வீரர்களுடன் ஆடியது.

84-வது நிமிடத்தில் ஸ்பெயின் அணி 3-வது கோலை அடித்து இத்தாலியே மேலும் டென்ஷனாக்கியது. மாற்று வீரராக களம் இறங்கிய பெர்னாண்டோ டொரஸ் கோல் கீப்பர் பப்பனை லாவகமாக ஏமாற்றி கோல் அடித்தார். 88-வது நிமிடத்தில் ஸ்பெயின் அணி 4-வது கோலை அடித்தது. பெர்னாண்டோ டொரஸ் கொடுத்த பாஸ்சை மாற்று ஆட்டக்

காரர் ஜூயன் மதா அபாரமாக அடித்து கோலாக்கினார்.

இத்தாலி அணியால் கடைசி வரை ஒரு கோல் கூட திருப்ப முடியவில்லை. லீக் சுற்றில் இரு அணிகளும் மோதிய ஆட்டம் 1-க்கு1 என்ற கணக்கில் டிராவில் முடிந்து இருந்ததால் இறுதிப்போட்டியில் அனல் பறக்கும் என்று எதிர் பார்த்த ரசிகர்களுக்கு கடைசியில் ஏமாற்றமே மிஞ்சியது.

முடிவில் ஸ்பெயின் அணி 4-க்கு0 என்ற கோல் கணக்கில் இத்தாலியை எளிதில் தோற் கடித்து சாம்பியன் பட்டத்தை மீண்டும் கைப்பற்றியது.

ஸ்பெயின் அணி வெற்றி பெற்றதும், அந்த நாட்டு ரசிகர்கள் தெருக்களில் வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். இறுதிப் போட்டியில் மோசமான தோல்வியை சந்தித்த தால் இத்தாலி அணியின் வீரர்கள் மட்டுமின்றி ரசிகர்களும் சோகத்தில் ஆழ்ந்தனர்.

இந்த வெற்றி மூலம் ஸ்பெயின் அணி புதிய சாதனை படைத்தது. தொடர்ந்து 2 முறை யூரோ கோப்பையை வென்ற அணி என்ற பெருமையை பெற்றதுடன் தொடர்ந்து 3 பெரிய போட்டிகளில் (யூரோ 2008, உலக கோப்பை 2010, யூரோ 2012) `ஹாட்ரிக்' சாம்பியன் பட்டம் வென்ற முதல் அணி என்ற சிறப்பையும் பெறுகிறது.

### இறுதிப்போட்டியில் மிகப்பெரிய வெற்றி

யூரோ கோப்பை கால்பந்து வரலாற்றில் இறுதிப்போட்டியில் (ஸ்பெயின் 4-க்கு0 கோல் கணக்கில் இத்தாலியை தோற்கடித்தது) இவ்வளவு பெரிய வித்தியாசத்தில் ஒரு அணி வெற்றி பெறுவது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்பு 1972-ம் ஆண்டில் இறுதிப்போட்டியில் மேற்கு ஜெர்மனி அணி 3க்கு-0 என்ற கோல் கணக்கில் சோவியத் யூனியனை வீழ்த்தியதே மிகப்பெரிய வெற்றியாக இருந்தது.

### ஸ்பெயின் அணிக்கு ரூ.162 கோடி பரிசுத்தொகை

யூரோ கோப்பையை கைப்பற்றிய ஸ்பெயின் அணிக்கு மொத்தம் ரூ.162 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது. இதில் பங்கேற்பு கட்டணம் லீக் முதல் பெற்ற வெற்றிகளுக்கான ரொக்கப்பரிசுகளும் அடங்கும். 2-வது இடத்தை பிடித்த இத்தாலி அணிக்கு ரூ.135 கோடி பரிசாக கிடைத்தது. அரை இறுதியில் தோல்வி அடைந்த ஜெர்மனி அணிக்கு ரூ.111 கோடியும், போர்ச்சுகல் அணிக்கு ரூ.104 கோடியும், கால் இறுதியில் தோல்வி கண்ட இங்கிலாந்து அணிக்கு ரூ.86 கோடியும், செக். குடியரசு அணிக்கு ரூ.83 கோடியும், பிரான்ஸ், கிரீஸ் அணிகளுக்கு தலா ரூ.80 கோடியும் கிடைத்தன. மொத்தம் ரூ.1,365 கோடி பரிசாக வழங்கப்பட்டது.

### 2016-ம் ஆண்டில் பிரான்சில் அடுத்த யூரோ போட்டி

உலக கோப்பைக்கு அடுத்தபடியான பெரிய கால்பந்து போட்டியான யூரோ கோப்பை கால்பந்து போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது. 14-வது யூரோ போட்டி போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளில் சமீபத்தில் நடந்து முடிந்தது. 2016-ம் ஆண்டுக்கான 15-வது யூரோ கோப்பை பிரான்சில் நடத்தப்படுகிறது. இதில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை 16-ல் இருந்து 24 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



## யூரோ கோப்பையை வென்ற அணிகள்

| | |
|---|---|
| 1960 – சோவியத் னியன் | 1988 – நெதர்லாந்து |
| 1964 – ஸ்பெயின் | 1992 – டென்மார்க் |
| 1968 – இத்தாலி | 1996 – ஜெர்மனி |
| 1972 – மேற்கு ஜெர்மனி | 2000 – பிரான்ஸ் |
| 1976 – செக்கோஸ்லோவக்கியா | 2004 – கிரீஸ் |
| 1980 – மேற்கு ஜெர்மனி | 2008 –ஸ்பெயின் |
| 1984 – பிரான்ஸ் | 2012 –ஸ்பெயின் |

# வரலாற்று சாதனை படைத்த ஸ்பெயின்

யூரோ கோப்பை இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி, இத்தாலியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம் யூரோ கோப்பையை அதிகபட்சமாக 3 முறை வென்ற ஜெர்மனி (1972, 1980, 1996) அணியின் சாதனையை சமன் செய்தது. ஸ்பெயின் அணி 1964, 2008 மற்றும் இந்த ஆண்டில் யூரோ கோப்பையை வென்றுள்ளது.

அத்துடன் யூரோ கோப்பையை தொடர்ச்சியாக 2 முறை வென்ற முதல் அணி என்ற பெருமையை பெற்றுள்ளது. மேலும் உலக கோப்பை, யூரோ போட்டிகளில் இத்தாலி அணியை நீண்ட நாட்கள் வீழ்த்தியது இல்லை என்ற மனக்குறையையும் இப்போது தீர்த்துக்கொண்டது.

அத்துடன் 2008 யூரோ, 2010 உலக கோப்பை போட்டி, 2012 யூரோ ஆகிய பெரிய போட்டிகளில் தொடர்ந்து பட்டம் வென்ற முதல் அணி என்ற அரிய வரலாற்று சாதனையையும் ஸ்பெயின் அணி நேற்று முன்தினம் படைத்தது.

# தங்க ஷூவை கைப்பற்றிய ஸ்பெயின் வீரர்

14வது யூரோ கோப்பை போட்டியில் மொத்தம் 31 ஆட்டங்களின் முடிவில் 76 கோல்கள் அடிக்கப்பட்டன.

இந்த போட்டியில் தனிநபர் அதிகபட்சமாக அடித்த கோல்கள் எண்ணிக்கை 3 ஆகும். குரோஷியா வீரர் மரியோ மன்ட்சுகிச், இத்தாலி வீரர் மரியோ பலோடெலி, ரஷிய வீரர் ஆலன் சாகோவ், ஜெர்மனி வீரர் மரியோ கோம்ஸ், போர்ச்சுகல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டொரஸ் ஆகியோர் தலா 3 கோல்கள் அடித்தனர். கோல் அடித்ததில் டை நிலவும் போது கோல் அடிக்க உதவிய எண்ணிக்கை கணக்கில் கொள்ளப்படும்.

அதில் சமநிலை நிலவும் பட்சத்தில் ஆடிய நேரம் கணக்கில் கொள்ளப்படும். குறைந்த நேரம் விளையாடி அதிக கோல் அடித்ததால் ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டொரஸ் அதிக கோல் அடித்தவர்களுக்கான தங்க ஷூவை தட்டிச் சென்றார்.

# இரட்டையரில் சானியாவுடன் இணையும் ருஷ்மி சக்ரவர்த்தி

லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்க சானியா மிர்சாவுக்கு `வைல்டு கார்டு' சலுகை கிடைத்துள்ளதால் அவர் பெண்கள் இரட்டையரில் ருஷ்மி சக்ரவர்த்தியுடன் இணைந்து களம் இறங்குகிறார். சானியாவும், ருஷ்மியும் 2010-ம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டில் வெண்கலப்பதக்கம் வென்றனர். ஆனால் அதன் பிறகு இருவரும் சேர்ந்து விளையாடியதில்லை. என்றாலும் தங்களுக்குள்ள தனிப்பட்ட அனுபவங்கள் ஒலிம்பிக்கிலும் மீண்டும் ஜோடி சேர வழிவகுத்துள்ளதாக 34 வயதான ருஷ்மி சக்ரவர்த்தி கூறியுள்ளார்.

தமிழக வீராங்கனையான ருஷ்மி சக்ரவர்த்தி மேலும் கூறுகையில், `உலகின் முன்னணி இரட்டையர் வீராங்கனைகளில் சானியாவும் ஒருவர்.

நானும் நிறைய ஐ.டி.எப். இரட்டையர் பட்டங்களை வென்றிருக்கிறேன். நாங்கள் இருவரும் காமன்வெல்த் டென்னிசில் சேர்ந்து விளையாடி உள்ளோம். அதே போன்ற உணர்வு தான் ஒலிம்பிக்கிலும் இருக்கும். எங்களுக்குள் நல்ல புரிந்துணர்வு உள்ளது.

ஒலிம்பிக், எதிர்பார்ப்பு மிகுந்த போட்டி. நான் உடல்தகுதியிலும், ஒலிம்பிக்குக்கு தயாராவதிலும் கவனம் செலுத்தி வருகிறேன். போட்டியின் முடிவை யாராலும் கணிக்க முடியாது. ஆனால் என்னால் முடிந்த வரை சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவேன்' என்றார்.




தமிழ்நாடு பள்ளிகள் கிரிக்கெட் சங்கத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் சென்னையில் நடைபெற்றது.
இக்கூட்டத்தில் தமிழ்நாடு பள்ளிகள் கிரிக்கெட் சங்க செயலாளர் பி.பி.சுனில்குமார்,
சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கி பேசியபோது எடுத்தபடம்.



தமிழ்நாடு பள்ளிகள் கிரிக்கெட் சங்கத்தின் சார்பில் சென்னையில் நுங்கம்பாக்கத்திலுள்ள லயோலா கல்லூரியில் சிறுவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சி நடைபெற்று வருகிறது. இதில், பங்கேற்று பயிற்சி பெற்றுவரும் சிறுவர்களுக்கு பயிற்சியாளர் சில டிப்ஸ்களை வழங்கும்போது எடுத்தபடம்.







தமிழகத்தில் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ள திட்டங்களை அமல்படுத்துவது குறித்தும், ஏற்கனவே அமல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களை மேம்படுத்துவது குறித்தும் தமிழக பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் என்.ஆர்.சிவபதி தலைமையில் ஆய்வுக்கூட்டம் சென்னையில் நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்ற போது எடுத்தபடம். இதில் விளையாட்டுத்துறை செயலாளர் ஜி.ஏ.ராஜ்குமார், எஸ்.டி.ஏ.டி. உறுப்பினர் செயலாளர் எம்.விஜயகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.







தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக்கூடங்களில் படித்துவரும் மாணவர்களில் 7 முதல் 17 வயது வரையிலானவர்களுக்கு செஸ் விளையாட்டு கட்டாய விளையாட்டாக தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இத்திட்டத்தை அமல்படுத்துவதற்காக பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு செஸ் விளையாட்டு கற்றுத்தரும் திட்டத்தை பள்ளிக்கல்வித்துறை துவங்கியுள்ளது. இப்பயிற்சியை எஸ்.டி.ஏ.டி. உறுப்பினர் செயலர் விஜயகுமார் துவங்கி வைத்தபோது எடுத்தபடம். அருகில் பள்ளிக்கல்வித்துறையின் முதன்மை உடற்கல்வி இயக்குனர் கண்ணையன் இருக்கிறார்.





சென்னையில் நடைபெற்ற அகில இந்திய ஒய்.எஸ்.சி.ஏ. கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் இந்தியா சிமெண்ட்ஸ் அணியும், எஸ்.பி.எம்.அணியும் சாம்பியன் பட்டத்தை பகிர்ந்து கொண்டன. இந்த அணிகளின் கேப்டன்களுக்கு (அகில் –எஸ்.பி.எம்., எஸ்.சுரேஷ்குமார்–இந்தியா சிமெண்ட்ஸ்) தமிழ்நாடு கிரிக்கெட் சங்க செயலாளர் காசி விஸ்வநாதன் ஒய்.எஸ்.சி.ஏ. கோப்பையை வழங்கியபோது எடுத்தபடம். அருகில் இணை செயலாளர் ஜி.நடராஜன், ஒய்.எஸ்.சி.ஏ. செயலாளர் எம்.எஸ்.குருமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.



சென்னையில் கென்சஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் – ஆந்திரா கிளப் இணைந்து நடத்திய சர்வதேச ஸ்னூக்கர் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய வீரரான கமால் சாவ்லா சகவீரர் சௌரவ் கோத்தாரியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் பெற்றார். கமால் சாவ்லாவுக்கு பரிசுக்கோப்பை வழங்கியபோது எடுத்தபடம்.

# ஒலிம்பிக் போட்டிக்கு கடினமாக உழைக்க வேண்டும்




கடந்த சில தினங்களுக்கு முன்பாக பாங்காக்கில் நடைபெற்ற தாய்லாந்து ஓபன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய வீராங்கனை சாய்னா நேவால், சமீபத்தில் முடிவடைந்த இந்தோனேஷிய பேட்மிண்டன் சூப்பர் சீரிஸ் போட்டியில் சீனாவின் ஜூயோருயை போராடி தோற்கடித்து 3-வது முறையாக பட்டத்தை கைப்பற்றி சாதனை படைத்தார்.

இரண்டு மகுடங்களை வென்று தாயகம் திரும்பிய சாய்னாவுக்கு விமான நிலையத்தில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஆந்திர விளையாட்டு அமைச்சகம் சார்பில் ஐதராபாத்தில் அவருக்கு பாராட்டு விழா நடந்தது. இதன் பின்னர் பேட்மிண்டன் உலக தரவரிசையில் 5-வது இடம் வகிக்கும் 22 வயதான சாய்னா நேவால் நிருபர்களிடம் கூறியதாவது:-

தொடர்ச்சியாக இரண்டு பட்டங்களை வென்றது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. என்னை ஊக்குவித்து வரும் ஆந்திரா, அரியானா அரசுகள் மற்றும் எனது பயிற்சியாளர் கோபிசந்த், பெற்றோர், எனது வெற்றிக்காக வேண்டும் நலம் விரும்பிகள் அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றிகள் எனக்கு மிகப்பெரிய உந்துதலாக அமைந்துள்ளன.

இந்தோனேஷிய போட்டியில் சீன முன்னணி வீராங்கனைகளுக்கு எதிராக சிறப்பாக விளையாடியது மகிழ்ச்சி அளிக்கிறது. சீன வீராங்கனைகள் ஒவ்வொரு புள்ளிக்கும் பலத்த சவால் அளிக்கக்கூடியவர்கள். அப்படிப்பட்ட அவர்களை வீழ்த்துவது எளிதான விஷயம் அல்ல. இருப்பினும் ஒலிம்பிக்கில் அவர்களை தோற்கடித்து பதக்கம் வெல்வது சாத்தியமான ஒன்று தான்.

இந்தோனேஷிய பேட்மிண்டனில் கால்இறுதியில் சீனாவின் ஷிஸியான் வாங்கை (1 மணி 36 நிமிடங்கள் நடந்தது) நீண்ட நேரம் போராடி வீழ்த்தியது எனக்கு மறக்க முடியாத அனுபவம். களத்திற்குள் கடுமையாக போராடி ஓய்ந்தே போய் விட்டேன். இறுதியில் வெற்றி பெற்றது மகிழ்ச்சியை அளித்தது. அனேகமாக இது, பெண்கள் ஒற்றையர் வரலாற்றில் நீண்ட நேரம் நடந்த ஆட்டமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் எனது வாழ்க்கையில் அதிக நேரம் நடந்த மோதல் இது தான் என்பதில் சந்தேகமில்லை. 3 செட் வரை நீடித்த இந்த ஆட்டம் எனக்கு நிறைய நம்பிக்கையை கொடுத்தது. என்றாலும் இது போன்ற ஆட்டங்களை என்னால் நம்ப முடியாது.

தரவரிசையை பற்றி எனக்கு கவலை இல்லை. தொடர்ந்து சிறப்பாக விளையாடினால் ஒரு நாள் `நம்பர் ஒன்' இடம் நம்மை வந்து சேரும் என்பதை அறிவேன். எனவே போட்டியில் வெற்றி பெறுவது தான் முக்கியம்.

அடுத்து எனது இலக்கு ஜூலை 27-ந்தேதி தொடங்கும் லண்டன் ஒலிம்பிக் போட்டி ஆகும். இதற்கு தான் உண்மையிலேயே ரொம்ப கடினமாக தயாராக வேண்டியது அவசியம். இதற்காக சிறப்பு பயிற்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. எனவே அடுத்த 4 முதல் 5 வாரங்கள் எனக்கு கடினமான நாட்களாக இருக்கும். எனது ஆட்டத்தின் சில பகுதிகளில் கவனம் செலுத்த வேண்டி இருக்கிறது. ஒலிம்பிக் விளையாட்டுக்கு முன்பாக பார்ம், உடல்தகுதி உள்ளிட்ட அனைத்திலும் நல்ல நிலையுடனும், காயம் ஏதுமின்றியும் இருப்பது முக்கியம்.

ஒலிம்பிக் போட்டி கடினமான போட்டி ஆகும். இதில் எப்போதும் நெருக்கடி இருக்கத்தான் செய்யும். நெருக்கடி, எதிர்பார்ப்புகள் பற்றி சிந்திக்க விரும்பவில்லை. இதில் பதக்கம் வெல்வேன் என்று உறுதியாக நம்புகிறேன்.

இவ்வாறு சாய்னா நேவால் கூறினார்.

# தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக

# என்.சீனிவாசன் மீண்டும் தேர்வு



தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் 82-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் சென்னையில் நடந்தது. இதில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இதன்படி தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக என்.சீனிவாசன், தொடர்ந்து 8-வது முறையாக ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். இதே போல் செயலாளராக காசி விஸ்வநாதன், பொருளாளராக நரசிம்மன், துணைத்தலைவர்களாக கல்பாத்தி எஸ்.அகோரம், பிரபாகர் ராவ், பி.எஸ்.ராமன், ஜெகநாதன் (நகரம்), வெங்கடாசலம், மணிவண்ணன் (மாவட்டம்) ஆகியோரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் இணைச்செயலாளர் பதவிக்கு தேர்தல் நடந்தது. இதில் எஸ்.சீனிவாசனை தோற்கடித்து ஜி.நடராஜன் மீண்டும் இணைச்செயலாளர் ஆனார்.

## பார்முலா 1 கார்பந்தயம்

# ஸ்பெயின் வீரர் அலோன்சா முதலிடம்

2012-ம் ஆண்டுக்கான பார்முலா1 கார்பந்தயம் உலகம் முழுவதும் 20 சுற்றுகளாக நடக்கிறது. இதன் 8-வது பந்தயமான ஐரோப்பிய கிராண்ட்பிரி, ஸ்பெயின் நாட்டின் துறைமுக நகரான வலென்சியா டிராக்கில் நடந்தது. பந்தய தூரம் 308.883 கிலோ மீட்டர் (57 சுற்று) ஆகும். வழக்கம் போல் 24 வீரர்கள் பங்கேற்ற இந்த போட்டியில் 11-வது வரிசையில் இருந்து புறப்பட்ட ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ அலோன்சா (பெராரி அணி) முதலிடத்தை பிடித்து உள்ளூர் ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். பந்தய தூரத்தை 1 மணி 44 நிமிடம் 16.649 வினாடிகளில் கடந்த அவருக்கு 25 புள்ளிகள் கிடைத்தன. இந்த சீசனில் அவர் பதிவு செய்த 2-வது வெற்றி இதுவாகும். 2-வது இடத்தை பின்லாந்தின் கிமி ரெய்க்கோனனும் (லோட்டஸ் அணி), 3-வது இடத்தை ஜெர்மனியின் மைக்கேல் ஷூமாக்கரும் (மெர்சிடஸ்) பிடித்தனர். 7 முறை சாம்பியனான ஷூமாக்கர் ஓய்வில் இருந்து விடுபட்டு மீண்டும் போட்டிக்கு வந்த பிறகு டாப்-3-க்குள் வருவது இதுவே முதல் முறையாகும்.

இந்த பந்தயத்தில் நடப்பு சாம்பியனும், முதல் வரிசையில் இருந்து புறப்பட்டவருமான ஜெர்மனியின் செபாஸ்டியன் வெட்டல் தான் (ரெட்புல் அணி) வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவரது கார் 33-வது சுற்றில் பழுதடைந்து விட்டது. திடீரென எஞ்சின் ஆப் ஆனதால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அத்துடன் போட்டியில் இருந்தும் விலக நேரிட்டது.

இந்திய தொழிலதிபர்களை உரிமையாளராக கொண்ட சகாரா போர்ஸ் இந்தியா அணி வீரர்கள் நிகோ ஹல்கென்பர்க் மற்றும் பால் டி ரெஸ்டா முறையே 5-வது மற்றும் 7-வது இடங்களை பிடித்து தங்களது அணிக்கு 10 மற்றும் 6 புள்ளிகள் வீதம் பெற்றுத்தந்தனர். இந்த சீசனில், போர்ஸ் இந்தியா அணியின் சிறந்த செயல்பாடு இதுவாகும். ஹிஸ்பானியா அணிக்காக பங்கேற்று வரும் தமிழகத்தை சேர்ந்த நரேன் கார்த்திகேயனால் 18-வது இடமே பிடிக்க முடிந்தது.

இதுவரை நடந்துள்ள 8 சுற்றுகள் முடிவில் அலோன்சா 111 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ஆஸ்திரேலியாவின் மார்க் வெப்பர் 91 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும் உள்ளனர். 9-வது சுற்று பந்தயம் இங்கிலாந்தில் அடுத்த மாதம்(ஜூலை) 8-ந்தேதி நடக்கிறது.



# சர்வதேச ஸ்னூக்கர் போட்டி இந்திய வீரர் கமால் சாவ்லா 'சாம்பியன்'

சென்னையிலுள்ள ஆந்திரா சமூக மற்றும் கலாசார சங்கம் சார்பில் சர்வதேச ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்போட்டி நடந்தது.

கென்சஸ் நிறுவனம் ஆதரவுடன் நடைபெற்ற இந்த போட்டியில் இறுதிப்பந்தயத்தில் உலகின் 3-ம் நிலை வீரரான கமால் சாவ்லா (இந்தியா), முன்னாள் தேசிய 'நம்பர்2' வீரர் சவுரவ் கோதாரியை எதிர்கொண்டார்.

இதில் கமால் சாவ்லா 6-க்கு4 என்ற பிரேம்கள் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றார். சாம்பியன் பட்டம் வென்ற கமால் சாவ்லாவுக்கு ரூ.2 லட்சமும், 2-வது இடத்தை பிடித்த சவுரவ் கோதாரிக்கு ரூ.1 லட்சமும் ரொக்கப்பரிசாக வழங்கப்பட்டது.

---

# ஒலிம்பிக் வில்வித்தை போட்டிக்கு இந்திய ஆண்கள் அணி தகுதி

ஒலிம்பிக் போட்டி லண்டனில் ஜூலை 27-ந் தேதி முதல் ஆகஸ்டு 12-ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டிக்கான கடைசி தகுதி சுற்றான உலக கோப்பை வில்வித்தை (நிலை 3) போட்டி அமெரிக்காவில் நடந்தது.

இதன் ஆண்கள் `ரிகர்வ்' அணிகள் பிரிவில் தருண்தீப் ராய், ஜெயந்த தலுக்கர், ராகுல் பானர்ஜி ஆகியோர் அடங்கிய இந்திய ஆண்கள் அணி இறுதிப்போட்டியில் 218-க்கு 221 என்ற புள்ளி கணக்கில் ஜப்பானிடம் தோல்வி கண்டு 2-வது இடம் பிடித்தது.

இதில் முதல் 3 இடங்களை பிடித்த அணிகள் லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு முன்னேறின. இதன்படி 2-வது இடம் பெற்ற இந்திய ஆண்கள் அணி லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றது.

கடந்த ஆண்டு நடந்த உலக கோப்பை போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் தீபிகா குமாரி, பாம்பல்யா தேவி, ஷெக்ரோவ் சுரோ ஆகியோர் அடங்கிய இந்திய பெண்கள் அணி ஏற்கனவே லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது.



தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த சாகச வீரர் நிக் டி விட், டெல்லியில் இந்தியா கேட் முன்பாக மோட்டார் பைக்கில் சாகசம் நிகழ்த்தி காட்டியபோது எடுத்தபடம்.

# முன்னாள் ஹாக்கி வீரர்கள் கௌரவிப்பு

ஒலிம்பிக் ஹாக்கியில் இந்திய அணிக்கு ஒரு காலம் பொற்காலமாக இருந்தது. ஒலிம்பிக் ஹாக்கியில் 8 தங்கப் பதக்கங்களை அள்ளிய இந்திய அணி கடைசியாக 1980-ம் ஆண்டு தங்கப்பதக்கம் பெற்றிருந்தது. அதன் பிறகு வீழ்ந்த இந்திய ஹாக்கி அணி இதுவரை நிமிரவே இல்லை. என்றாலும் இந்த முறை லண்டன் ஒலிம்பிக்கில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையில் இந்திய வீரர்கள் காத்திருக்கிறார்கள்.

ஒலிம்பிக் ஹாக்கியில் இதுவரை தங்கப்பதக்கம் வென்ற இந்திய அணியில் இடம் பிடித்திருந்த முன்னாள் வீரர்களுக்கு `ஹாக்கி இந்தியா' அமைப்பு சார்பில் டெல்லியில் பாராட்டு விழா நடந்தது. ஒரு முறை ஊக்கத்தொகை என்ற திட்டத்தின் அடிப்படையில் தங்கம் வென்ற அணியில் இடம் பிடித்து தற்போது உயிருடன் இருக்கும் 34 வீரர்களுக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

இதில் லெஸ்லி கிளாடியஸ் (1948 லண்டன், 1952 ஹெல்சின்கி, 1956 மெல்போர்ன் ஒலிம்பிக்), கேஷக் தத் (1948, 1952), ஜஸ்வந்த் ராஜ்புத் (1948, 1952), ரக்பிர் லால் (1948, 1956), ஹர்பால் கவுசிக் (1956, 1964) உள்ளிட்டோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். 1980-ம் ஆண்டு மாஸ்கோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இந்திய அணியில் அங்கம் வகித்த தமிழகத்தை சேர்ந்த வி.பாஸ்கரனும் கவுரவிக்கப்பட்டார்.

லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் 16 பேர் கொண்ட இந்திய வீரர்களும் இதில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு இது வழியனுப்பும் விழாவும் இந்த விழாவின்போது இணைந்து நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மத்திய விளையாட்டுத்துறை மந்திரி அஜய் மக்கான் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசுகையில், நான் விளையாட்டுத்துறை

## ஒலிம்பிக்குக்கு சஹானா குமாரி தகுதி



மாநிலங்களுக்கு இடையிலான தேசிய சீனியர் அத்லடிக் சாம்பியன்ஷிப் போட்டி ஐதராபாத்தில் நடந்தது.

இதில் உயரம் தாண்டுதலில் கர்நாடக வீராங்கனை சஹானா குமாரி 1.92 மீட்டர் உயரம் தாண்டி, லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இதன் மூலம் ஒலிம்பிக் போட்டிக்கு அத்லடிக் பிரிவில் தகுதி பெற்ற இந்தியர்களின் எண்ணிக்கை 14-ஆக உயர்ந்துள்ளது.

மந்திரியாகி 17 மாதங்கள் ஆகிறது. இந்த 17 மாதங்களில் எனது சிறந்த நாள் இது தான்.

ஹாக்கி ஜாம்பவான்கள் அனைவரும் இங்கு வந்துள்ளனர். மீண்டும் நாம் அந்த பொற்காலத்தை நெருங்கியிருக்கிறோம் என்ற உணர்வு எழுகிறது. தலைச்சிறந்த வீரர்கள் இங்கு குழுமியிருக்கிறார்கள். இதைவிட சிறப்பாக ஒலிம்பிக் அணியை வழியனுப்ப முடியாது என்றார்.

1980ம் ஆண்டு தங்கம் வென்ற அணியில் இடம் பெற்றிருந்த எம்.எம்.சோமயா பேசுகையில், பல ஆண்டுகளுக்கு பிறகு இப்படியொரு நிகழ்ச்சியின் மூலம் கவுவிக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த நிகழ்ச்சியின் மூலம் எங்களது பழைய நண்பர்களை சந்திக்கும் வாய்ப்பை உருவாக்கி தந்த ஹாக்கி இந்தியாவுக்கு நன்றி என்றார்.

இந்திய அணியின் தற்போதைய கேப்டன் பாரத் செட்ரில் கூறுகையில், லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்பதற்காக மட்டும் நாங்கள் செல்லவில்லை. அங்கு ஏதாவது சாதிக்க விரும்புகிறோம். லண்டனில் பதக்கம் வெல்லும் போது, அது இந்தியாவில் மீண்டும் ஹாக்கி மீது இளைஞர்களின் கவனம் திரும்ப உதவிகரமாக இருக்கும். எங்களது முதல் இலக்கு அரைஇறுதிக்குள் நுழைவது தான். ஒவ்வொரு வீரரும் தங்களது 70 முதல் 80 சதவீத திறமையை களத்தில் வெளிப்படுத்தினால் இது சாத்தியம் தான் என்றார்.

இந்திய பயிற்சியாளர் மைக்கேல் நோப்ஸ் கூறுகையில், கொஞ்சம் அதிர்ஷ்டத்தின் துணையும் இருக்கும் போது ஒலிம்பிக்கில் அதிசயம் நிகழ்த்த முடியும். எங்களது அணி திறமை வாய்ந்தது. ஆனால் வீரர்கள் தன்னம்பிக்கையும், தங்களது திறமை மீது நம்பிக்கையும் வைக்க வேண்டியது அவசியம் என்றார்.

இந்திய ஹாக்கி அணி பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளில் நடக்கும் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்காக டெல்லியில் இருந்து புறப்பட்டது. இந்த போட்டிகளை முடித்துக் கொண்டு ஒலிம்பிக்குக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அங்கிருந்து நேரடியாக லண்டனுக்கு சென்று விடும்.

# ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் அனகா அலங்காமணி சாம்பியன்

19-வது ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி ஈரானின் கிஷ் ஐஸ்லாண்டில் நடந்தது. இதில் பெண்களுக்கான 19 வயதுக்குட்பட்டோருக்கான இறுதி சுற்றில் நடப்பு சாம்பியன் இந்தியாவின் அனகா அலங்காமணி, ஹாங்காங்கின் ஹா போ ஹோவுடன் மோதினார். 39 நிமிடங்கள் நடந்த விறுவிறுப்பான இந்த மோதலில் அனகா அலங்காமணி 11க்கு-3, 11க்கு-5, 7க்கு-11, 11க்கு-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதன் மூலம் இந்த பட்டத்தை அடுத்தடுத்து இரண்டு முறை வென்றுள்ள முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை தமிழகத்தை சேர்ந்த அனகா பெற்றார். இதன் 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்கள் பிரிவில் இந்தியாவின் குஷ்குமார் பட்டத்தை தட்டிச்சென்றார்.



# விம்பிள்டன்: நடால், ஷரபோவா, கிலிஸ்டர்ஸ் வெளியேற்றம்



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற 4 வகையான டென்னிஸ் போட்டிகள் ஆண்டுதோறும் நடந்து வருகிறது. இதில் பழமையானதும், மிகவும் கவுரவமிக்கதுமான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடந்து வருகிறது.

ஒலிம்பிக் போட்டிக்கான டென்னிசும் இதே புல்தரை மைதானங்களிலேயே நடப்பதால், அதற்கு சிறந்த பயிற்சியாக விம்பிள்டன் போட்டி அமையும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் முன்னணி வீரர், வீராங்கனைகள் முன்பை விட இந்த முறை ரொம்ப தீவிரமாக பங்கேற்று வருகிறார்கள்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நம்பர் ஒன் வீரர் நடப்பு சாம்பியன் நோவக் ஜோகோவிச் (செர்பியா), 2-ம் நிலை வீரர் ரபெல் நடால் (ஸ்பெயின்), 3-ம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) ஆகியோர் இடையே தான் கடுமையான போட்டி நிலவுகிறது.

இவர்களில் ஒருவரே விம்பிள்டன் பட்டத்தை வெல்லக்கூடும் என்பது பெரும்பாலானோரின் கணிப்பாகும். ஆனால், ரபேல் நடால் 3வது சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார். களிமண் தரை போட்டியான பிரெஞ்ச் ஓபனில் நடாலிடம் வீழ்ந்த ஜோகோவிச், புல்தரையில் விளையாடுவதில் வல்லவர்.

30 வயதான ரோஜர் பெடரர், 6 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். 14-வது முறையாக விம்பிள்டனில் பங்கேற்கிறார். ஜோகோவிச், நடாலின் ஆதிக்கத்தால் கடந்த இரண்டரை ஆண்டுகளாக எந்த ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் வெல்ல முடியாமல் தவித்து வரும் பெடரர், இந்த பட்டத்தை தனதாக்கினால் அதிக முறை விம்பிள்டனை வென்றவரான (7 முறை) அமெரிக்காவின் பீட் சாம்ப்ராசின் சாதனையை சமன் செய்து விடுவார். பட்டம் வெல்ல கனவு கண்டு கொண்டிருக்கிறேன். அதை மறுப்பதற்கில்லை என்று தெரிவித்த பெடரர், மிகுந்த நம்பிக்கையுடன் இருப்பதாக குறிப்பிட்டார். மேலும் அவர் மீண்டும் நம்பர் ஒன் இடத்தை பிடிப்பதற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. ஜோகோவிச் இறுதிப்போட்டிக்கு முன்னேறினால் நம்பர் ஒன் இடத்தை தக்க வைத்துக் கொள்வார். மாறாக பெடரர் கோப்பையை வென்று, ஜோகோவிச் அரைஇறுதியை தாண்ட முடியாமல் போனால் பெடரரின் வசம் நம்பர் ஒன் வந்து விடும்.

பெண்கள் பிரிவிலும் வழக்கம் போல் நட்சத்திர பட்டாளம் களம் கண்டுள்ளது. பிரெஞ்ச் ஓபனை கைப்பற்றி மீண்டும் நம்பர் ஒன் இடத்தை பிடித்துள்ள ரஷியாவின் மரிய ஷரபோவா கோப்பையை வெல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆனால், 3வது சுற்றில் தோற்று வெளியேறினார்.

ஜூன் 25ம் தேதி துவங்கி ஜூலை 8-ந்தேதி வரை நடைபெறும் இந்த டென்னிஸ் திருவிழாவிற்கான மொத்த பரிசுத்தொகை ரூ.143 கோடியாகும். இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஒற்றையர் பிரிவில் பட்டம் வெல்வோர் தலா ரூ.10 கோடி வீதம் பரிசுத்தொகையாக பெறுவர்.

நடால் அதிர்ச்சி தோல்வி

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பட்டம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட உலகின் 2-ம் நிலை வீரர் ஸ்பெயினின் ரபெல் நடால், தரவரிசையில் 100-ம் இடம் வகிக்கும் செக். குடியரசின் லுகாஸ் ரோசலுடன் மோதினார்.

5 செட் வரை நீடித்த இந்த திரிலிங்கான ஆட்டத்தில் நடால் எதிர்பாராத விதமாக மண்ணை கவ்வினார். அவரை 6க்கு-7(9), 6க்கு-4, 6க்கு-4, 2க்கு-6, 6க்கு-4 என்ற செட் கணக்கில் 3 மணி 18 நிமிடங்கள் போராடி லுகாஸ் ரோசல்

வென்றார். ரோசல் 22 `ஏஸ்' சர்வீஸ்களும் வீசி அசத்தினார். நடாலின் தோல்வி 135 ஆண்டு கால விம்பிள்டன் வரலாற்றில் மிகப்பெரிய தோல்விகளில் ஒன்றாக வர்ணிக்கப்படுகிறது.

தனது கடைசி 5 விம்பிள்டன் போட்டியிலும் இறுதிப்போட்டியில் விளையாடியவர் நடால். இதில் 2008, 2010-ம் ஆண்டுகளில் மகுடம் சூடியுள்ளார். மேலும் கடந்த 5 கிராண்ட்ஸ்லாம் போட்டியில் தொடர்ந்து இறுதிப்போட்டிக்கு வந்துள்ளார். பிரெஞ்ச் ஓபனை வென்று அடுத்த 17 நாட்களில் இப்படியொரு மோசமான தோல்வியை சந்தித்துள்ளார். 11 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான நடால் இதற்கு முன்பு 2005-ம் ஆண்டு விம்பிள்டனில் இதே நிலையில் தோற்று இருந்தார்.

அவரை தோற்கடித்த 26 வயதான லுகாஸ் ரோசலுக்கு விம்பிள்டனில் பிரதான சுற்றில் விளையாடுவது இதுவே முதல் முறையாகும். வெற்றிக்கு பிறகு அவர் கூறுகையில், இந்த வெற்றி ஆச்சரியம் மட்டுமல்ல, கற்பனை போன்று உள்ளது. என்னால் இதனை நம்ப முடியவில்லை. எனது மகிழ்ச்சியை வெளிப்படுத்த வார்த்தைகளே இல்லை. நடாலுக்காக நான் வருத்தப்படுகிறேன். மீண்டும் இது போன்ற ஒரு ஆட்டத்தை என்னால் வெளிப்படுத்த முடியும் என்று நம்புகிறேன் என்றார்.

ஆண்கள் ஒற்றையர் 3-வது சுற்றில் நம்பர் ஒன் வீரரும், நடப்பு சாம்பியனுமான செர்பியாவின் ஜோகோவிச் 4க்கு-6, 6க்கு-2, 6க்கு-2, 6க்கு-2 என்ற செட் கணக்கில் செக்குடியரசின் ராடெக் ஸ்டெபனக்கை வீழ்த்தி 4-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.


பெண்கள் பிரிவில் நம்பர் ஒன் வீராங்கனை மரிய ஷரபோவா 6க்கு-1, 6க்கு-4 என்ற நேர் செட்டில் சீனத்தைபேயின் சுய் வெய்-ஹ௯சையை வெளியேற்றி 4-வது சுற்றை எட்டினார்.

பெண்கள் இரட்டையர் பிரிவின் 2-வது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மெடக் சாண்ட்ஸ் ஜோடி, பிரான்சின் போரெட்ஸ் காகோன்-கிரிஸ்டினா இணையை எதிர்கொண்டது. இதில் அபாரமாக ஆடிய சானியா கூட்டணி 6க்கு-3, 6க்கு-2 என்ற நேர் செட்டில் 55 நிமிடத்திற்குள் வெற்றி பெற்று 3-வது சுற்றுக்கு முன்னேறியது.

ஷரபோவா, கிலிஸ்டர்ஸ் அதிர்ச்சி தோல்வி

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 4-வது சுற்று ஆட்டத்தில் உலகின் 3-ம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), பெல்ஜியம் வீரர் சேவியர் மலிஸ்சியை எதிர்கொண்டார். இதில் பெடரர் 7க்கு-6(7க்கு-1), 6க்கு-1, 4க்கு-6, 6க்கு-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு முன்னேறினார்.





பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 4-வது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷியா) 4-க்கு6, 3க்கு-6 என்ற நேர்செட்டில் 15-ம் நிலை வீராங்கனை ஜெர்மனியின் சபின் லிசிகியிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு வெளியேறினார். பெல்ஜியம் வீராங்கனை கிம் கிலிஸ்டர்ஸ் 1க்கு-6, 1க்கு-6 என்ற நேர்செட்டில் ஜெர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரிடம் தோல்வி கண்டு வெளியேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கிவிடோடா (செக். குடியரசு) 4-க்கு6, 7க்கு-5, 6க்கு-4 என்ற செட் கணக்கில் இத்தாலியின் பிரான்செஸ்காவை தோற்கடித்து கால் இறுதிக்கு தகுதி பெற்றார். 4 முறை சாம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6-க்கு1, 2க்கு-6, 7க்கு-5 என்ற செட் கணக்கில் கஜகஸ்தானின் ஷிவ்டோவை வீழ்த்தி கால் இறுதிக்குள் நுழைந்தார்.

ஆக, காலிறுதிக்கு முன்பாகவே, ரபேல் நடால், மரிய ஷரபோவா, கிம் கிலிஸ்டர்ஸ் ஆகியோர் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# CHAMP PNR

EXCLUSIVE PR FOR SPORTS

New No.133, Old No.93,
Sydenhams Road,Periamet,
(opp.to SDAT Nehru Indoor Stadium Main Gate)
Chennai-600003.

Mobile-94441 93977, 90940 42200
Fax-044 25507997
email-champ.pnr@gmail.com
champ_pnr@yahoo.co.in




சென்னையில் நேரு ஸ்டேடியத்தில் உள்ள ஹால் ஆப் செஸ் அரங்கில் மைலாப்பூர் செஸ் கிளப் முருகப்பா குழுமத்தின் ஆதரவோடு நடத்திய போட்டியில் பல்வேறு வயதுப்பிரிவில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளை படத்தில் காணலாம்.




இலங்கையில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் செஸ் போட்டியில் 2 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்ற சென்னை வேலம்மாள் பள்ளி மாணவ, மாணவியர்களை படத்தில் காணலாம்.




தமிழ்நாடு மாநில டேபிள் டென்னிஸ் சங்கத்தின் சார்பில் எஸ்.டி.ஏ.டி. ஏ.கே.ஜி. கிளப் நடத்திய ஜிம்ன்கோ– ஐஸ்போர்ட்ஸ் 2வது மாநில ரேங்கிங் டேபிள் டென்னிஸ் போட்டியில் பல்வேறு வயதுப்பிரிவுகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகள் கஸ்டம்ஸ் மற்றும் சென்ட்ரல் எக்சைஸ் கூடுதல் இயக்குனர் ஜெனரல்(ஆடிட்) எஸ்.கண்ணன், கஸ்டம்ஸ் கூடுதல் கமிஷனர் பாலகிருஷ்ண ராஜூ ஆகியோருடன் இருப்பதை படத்தில் காணலாம். தமிழ்நாடு டேபிள் டென்னிஸ் சங்க இணை செயலாளர் ஜெ.செல்வகுமார், டேபிள் டென்னிஸ் ஒலிம்பியன்கள் ஏ.சரத்கமல், நேகா அகர்வால், ஐஸ்போர்ட்ஸ் இயக்குனர் சித்ரா சிவக்குமார் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# CELEBRITIES WHO LEARN TAEKWONDO



* Kylie Minogue
* Isha Koppikar
* Former U.S.President Bill Clinton
* Chris Angel, Magician
* Sharun Stone
* Bob Wise, Former Governor of West Virginia
* King Khan was also conferred with the title

"Honorary Black belt of Taekwondo" by the Korean Government.

ASSOCIATION OF TAMILNADU TAEKWONDO

# TAEKWONDO THE WAY OF LIFE



**GET TRAINED UNDER THE LIVING LEGEND**

**MASTER**


D.G.JOHN ALEXANDER

**CONTACT:**

PHONE:98401 82404

E-Mail:taekwondoalex@yahoo.com

லண்டன் ஒலிம்பிக் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் லியாண்டர் பெயசுடன் ஜோடி சேர மகேஷ்பூபதி, ரோகன் போபண்ணா ஆகியோர் மறுத்ததால், லியாண்டர் பெயஸ் ஜோடியாக விஷ்ணுவர்தனை தேர்வு செய்து அகில இந்திய டென்னிஸ் சங்கம் அறிவித்தது. அத்துடன் கலப்பு இரட்டையர் பிரிவில் லியாண்டர் பெயஸ் ஜோடியாக சானியா மிர்சா விளையாடுவார் என்றும் தெரிவித்தது. கலப்பு இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா தன்னுடன் ஜோடி



என்று லியாண்டரின் தந்தை வேஸ் பெயஸ் டெலிவிஷன் பேட்டியில் கூறியது எங்கள் மூவரையும் தர்மசங்கடத்தில் ஆழ்த்தி உள்ளது. இந்தியாவுக்காக விளையாடுவது தான் பெருமை. லியாண்டர் பெயஸ் உள்பட எந்தவொரு வீரருடனும் இணைந்து விளையாட எனக்கு பிரச்சினை இல்லை. எனக்கென்று ஒரு தேர்வு உண்டு. அது பற்றி இந்திய டென்னிஸ் சங்கம் கவலைப்பட்டதாக தெரியவில்லை. நாட்டுக்காக யாருடன் இணைந்து ஆடினாலும் என்னுடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி

# நான் என்ன தூண்டில் இரையா?

சேராவிட்டால், விஷ்ணுவர்தனுடன் ஜோடி சேர்ந்து விளையாட மாட்டேன் என்று லியாண்டர் பெயஸ் தரப்பில் இருந்து மிரட்டல் விடுக்கப்பட்டு இருந்தது. சானியா மிர்சாவுக்கு வைல்டு கார்டு சிறப்பு சலுகை கிடைத்தது. இதனால் டென்னிஸ் அணி தேர்வில் நிலவிய குழப்பம் தீர்ந்தது என்று எல்லோரும் நினைத்தனர்.

ஆனால், வைல்டு கார்டு கிடைத்த சில மணி நேரங்களில் சானியா மிர்சா தனது உள்ளக்குமுறலை கொட்டித் தீர்த்தார். அணி தேர்வில் தன்னை அகில இந்திய டென்னிஸ் சங்கம் பயன்படுத்திய விதம் குறித்து வேதனையும், கண்டனமும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சானியா மிர்சா சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு இந்தியா சார்பில் பங்கேற்க தகுதி பெற்று இருப்பது எனக்கு மிகுந்த உணர்ச்சிபூர்வமான மகிழ்ச்சியை அளிக்கிறது. என் மீது நம்பிக்கை வைத்து வைல்டு கார்டு அனுமதி வழங்கிய சர்வதேச டென்னிஸ் பெடரேஷனுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். டென்னிஸ் அணி தேர்வில் கடந்த சில நாட்களாக நிலவிய பிரச்சினை என்னை பாதித்தாலும், அதனை மறந்து போட்டியில் முழு திறனை வெளிப்படுத்தி விளையாடுவேன்.

விஷ்ணுவர்தனுடன், லியாண்டர் பெயஸ் சேர்ந்து விளையாட வேண்டும் என்றால் நான் (சானியா) லியாண்டர் பெயசுடன் கலப்பு இரட்டையரில் இணைந்து விளையாட உறுதி அளிக்க வேண்டும் பதக்கம் வெல்ல பாடுபடுவேன். எனது இந்த நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. எனக்கு நாட்டு மக்களின் ஆசி மட்டும் இருந்தால் போதும். அதற்கு மேல் எதுவும் தேவையில்லை.

லியாண்டர் பெயசுக்கு நான் சொல்வது என்னவென்றால் விஷ்ணுவர்தன் திறமை மிக்க வீரர். 2010-ம் ஆண்டில் ஆசிய விளையாட்டு போட்டியில் அவருடன் இணைந்து விளையாடி நான் வெள்ளிப்பதக்கம் வென்று இருக்கிறேன். ஆசிய போட்டியில் 3 முன்னணி வீரர்கள் ஒதுங்கிய நிலையிலும் நாங்கள் இருவரும் பதக்கம் வென்றோம்.

ரோகன்போபண்ணாவுடன் இணைந்து இரட்டையர் பிரிவில் விளையாட வேண்டும் என்பதில் மகேஷ்பூபதி உறுதியாக இருக்கிறார். இது இந்தியாவுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்று அவர் நம்புகிறார். பிரெஞ்ச் ஓபனை வென்ற பின்னர் ஒலிம்பிக்கில் இணைந்து விளையாடுவோம் என்று எனக்கு அளித்த வாக்குறுதியை மகேஷ்பூபதி கடைப்பிடிக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் யாருடன் இணைந்து விளையாட வேண்டும் என்பதில் முன்னுரிமை இருக்கும். மகேஷ்பூபதி தனது இணையை நாட்டின் நலன் கருதியே தேர்வு செய்து இருப்பார் என்று நான் நம்புகிறேன்.

21-ம் நூற்றாண்டில், திருப்திபடாத ஒரு மூத்த டென்னிஸ் வீரரை திருப்திபடுத்துவதற்காக இந்திய பெண்ணான என்னை தூண்டில் இரை போன்று அகில இந்திய டென்னிஸ் சங்கம் பயன்படுத்தியது எனக்கு மிகுந்த வேதனையை

அளிக்கிறது. இது பெண் இனத்தை அவமதிக்கும் செயலாகும். இது போன்ற செயலில் நாட்டிலேயே மிக உயர்வான டென்னிஸ் சங்கம் ஈடுபட்டது கண்டனத்துக்குரியது. லியாண்டருடன் இணைந்து ஆடுவது எனக்கு பெருமை என்றாலும் ஜோடி தேர்வு குறித்து அறிவித்த விதம் ஆண் ஆதிக்கத்தை காட்டுவதாக இருக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு விளக்கம் அளித்து இந்திய டென்னிஸ் சங்க பொதுச்செயலாளர் பாரத் ஒசா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஆண்கள் இரட்டையரில் பூபதியும், போபண்ணாவும் பெயசுடன் இணைய மறுத்ததால் ஆசிய விளையாட்டில் வெள்ளிப்பதக்கம் வென்றவர் என்ற அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு விஷ்ணு வர்தனை பெயசின் ஜோடியாக, தேர்வு கமிட்டி தேர்வு செய்தனர்.

ஒலிம்பிக்குக்கு நேரடியாக தகுதி பெற சானியாவுக்கும், சோம்தேவுக்கும் வைல்டு கார்டு கேட்டு விண்ணப்பிக்கவும் தேர்வு கமிட்டி முடிவு செய்தது. வைல்டு கார்டு இல்லாமல் சானியாவினால் கலப்பு இரட்டையருக்கு தகுதி பெற முடியாது.

இதைத் தொடர்ந்து ஆண்கள் இரட்டையர் தரவரிசையில் 7-வது இடமும், இந்தியாவின் நம்பர் ஒன் இடத்தை பெற்றவருமான லியாண்டர் பெயசையும், பெண்கள் இரட்டையர் தரவரிசையில் 12-வது இடமும் இந்தியாவின் நம்பர் ஒன் வீராங்கனையாக விளங்கும் சானியா மிர்சாவையும் ஒலிம்பிக் கலப்பு இரட்டையர் பிரிவுக்கு தேர்வு செய்தோம். இருவரது தரவரிசை சேர்க்கும் போது அதன் எண்ணிக்கை 19 ஆக வரும். இதன் மூலம் கலப்பு இரட்டையரில் பங்கேற்கும் டாப்-12 ஜோடிகளில் 9-வது இடத்தை பிடித்து தகுதி பெற முடிந்தது. இந்த தேர்வு முழுக்க முழுக்க தகுதி அடிப்படையிலேயே நடந்தது.

நாங்கள் அனைத்து வீரர், வீராங்கனைகளையும் மதிக்கிறோம். சானியா மிர்சா தனித்திறமை வாய்ந்த அற்புதமான வீராங்கனை என்பதை அறிவோம். சானியாவும், பெயசும் இணைந்து ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வார்கள் என்று நம்புகிறோம். வீரர்கள் அனைவரும் தங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் கைகோர்த்து, நாட்டிற்கு வெற்றிகளை தேடித்தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




**ஆசிய கிளப் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்பதற்காக இந்தியாவில் இருந்து ஓ.என்.ஜி.சி. அணி தகுதி பெற்றுள்ளது. இந்த அணி வீரர்கள் சென்னையில் இருந்து புறப்பட்ட போது நடந்த வழியனுப்பு விழாரில் கால்ஸ் டிஸ்டில்லரிஸ் நிர்வாக இயக்குனர் எஸ்.வாசுதேவன் பாராட்டு தெரிவித்தபோது எடுத்தபடம். அருகில் தமிழ்நாடு வாலிபால் சங்க செயலாளர் மார்ட்டின் சுதாகர், ஓ.என்.ஜி.சி. பொது மேலாளர் பின்டோ ஆகியோர் உள்ளனர்.**

# ஜூனியர்களுடன் ஜோடி சேரும் லியாண்டர் பெயஸ், மகேஷ் பூபதி

லண்டன் ஒலிம்பிக்கில், டென்னிஸ் ஆண்கள் இரட்டையரில் இந்தியா சார்பில் `எக்ஸ்பிரஸ் கூட்டணி' என்று அழைக்கப்படும் லியாண்டர் பெயசும், மகேஷ்பூபதியும் பங்கேற்பார்கள் என்று இந்திய டென்னிஸ் சங்கம் சில வாரங்களுக்கு முன்பு அறிவித்தது. அது முதல் இந்திய டென்னிசுக்குள் தொடர்ந்து சலசலப்பும், புகைச்சலும் நிலவியது.

கருத்துவேறுபாட்டால் பிரிந்த லியாண்டர் பெயசுடன் மீண்டும் ஒரு போதும் ஜோடி சேரமாட்டேன், அவருடன் நவம்பர் மாதத்தில் இருந்து பேசுவது கூட கிடையாது என்று மகேஷ்



பூபதி பகிரங்கமாக தெரிவித்தார். இதையடுத்து பெயசுடன், மற்றொரு முன்னணி வீரரான ரோகன் போபண்ணாவை சேர்க்க முயற்சி நடந்தது. அவரும் பெயசுடன் கைகோர்க்க மாட்டேன், மகேஷ் பூபதியுடன் இணைந்து விளையாடவே விரும்புகிறேன் என்று ஒரு குண்டை தூக்கி போட்டார். அகில இந்திய டென்னிஸ் சங்கம் பல முறை வற்புறுத்தியும் மகேஷ் பூபதி, லியாண்டருடன் இணைந்து விளையாடமாட்டேன் என்று பிடிவாதமாகவே கூறி வந்தார்.

இந்திய டென்னிஸ் சங்கமும் தனது நிலையில் உறுதியாக இருந்தது. பெயஸ் மற்றும் -பூபதி ஜோடி தான் லண்டன் ஒலிம்பிக்குக்கு செல்ல வேண்டும் இல்லாவிட்டால் பூபதி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று எச்சரித்தது. இதற்கிடையே, மகேஷ் பூபதியும், ரோகன் போபண்ணாவும் இந்த விவகாரத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி மத்திய விளையாட்டுத்துறை மந்திரி அஜய்மக்கானுக்கு கடிதம் எழுதினர்.

இதைத் தொடர்ந்து வீரர்கள் தேர்வு குறித்து கேள்வி எழுப்பிய மத்திய விளையாட்டு அமைச்சகம், ஒலிம்பிக் போட்டிக்கு இந்தியா சார்பில் இரண்டு ஜோடிகளை அனுப்ப வாய்ப்பு இருந்தும் ஒரு அணியை மட்டுமே அனுப்புவது ஏன்? என்பது குறித்து விளக்கம் அளிக்கும்படி இந்திய டென்னிஸ் சங்கத்தை அறிவுறுத்தியது.

இதன்படி டென்னிஸ் சங்கம் விளக்க கடிதம் அனுப்பியது. அதன்பிறகு மத்திய விளையாட்டு அமைச்சர் அஜய் மக்கான், வீரர்கள் தேர்வில் விளையாட்டு அமைச்சகம் தலையிடாது என்றும், நாட்டின் நலன் கருதி விளையாட்டு சங்கமும், வீரர்களும் தான் முடிவு செய்துகொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

இதற்கிடையில் லியாண்டர் பெயசும், ஜூனியர் வீரரை தனக்கு ஜோடியாக்கினால், ஒலிம்பிக்கில் விளையாட மாட்டேன் என்று எதிர்ப்பு தெரிவித்துவந்தார்.

வீரர்களின் பிடிவாதத்தால் இரண்டு ஜோடிகளை தேர்வு செய்யும் யோசனைக்கு இந்திய டென்னிஸ் சங்கம் வந்தது. அதாவது ஒரு ஜோடியாக மகேஷ் பூபதி மற்றும் ரோகன் -போபண்ணாவை அனுப்பு வது, இன்னொரு அணியாக லியாண்டர் பெயசுடன் ஜூனியர் வீரர்கள் யுகி பாம்ப்ரி (தரவரிசையில் 306-வது இடம் வகிப்பவர்) அல்லது விஷ்ணு வர்தன் (207-ம் நிலை வீரர்) ஆகியோரில் ஒருவரை ஜோடியாக்குவது என்பது குறித்து இந்திய டென்னிஸ் சங்க நிர்வாகிகள் ஆலோசித்தனர். இதற்கும் முதலில் பெயஸ் எதிர்ப்பு தெரிவித்தார்.

மகேஷ் பூபதி அல்லது போபண்ணா ஆகியோரில் யாராவது ஒருவர் என்னுடன் நாட்டுக்காக சேர்ந்து விளையாட மறுத்தால், அதன் பிறகு டென்னிஸ் சங்கம் முடிவின்படி அடுத்த சிறந்த வீரருடன் மகிழ்ச்சியுடன் விளையாடுவேன் என்றார்.

இதுகுறித்து இந்திய டென்னிஸ் சங்க நிர்வாகிகள் மீண்டும் கூடி விவாதித்தனர். ஒரு நாடு அதிகபட்சமாக இரண்டு ஜோடியை டென்னிசுக்கு அனுப்ப முடியும் என்பதால் வேறு வழியின்றி அந்த நிலைப்பாட்டை தேர்ந்தெடுத்தனர். இதன்படி மகேஷ் பூபதி-போபண்ணாவை ஒரு



இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா தன்னுடன் இணைந்து விளையாட வேண்டும் என்று நிபந்தனை விதித்து இருந்தார். அத்துடன் 39 வயதான லியாண்டர் பெயஸ் ஒலிம்பிக் போட்டியில் இருந்து விலகல் முடிவை எடுக்கலாம் என்றும் அவர் தரப்பில் இருந்து தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. அவரை சமாதானப்படுத்தும் முயற்சியில் அகில இந்திய டென்னிஸ் சங்கம் ஈடுபட்டது.

இந்திய அணி தேர்வு குறித்து மவுனம் காத்து வந்த லியாண்டர் பெயஸ், விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் வென்ற பின்னர் கூறியதாவது:

அகில இந்திய டென்னிஸ் சங்கம் தேர்வு செய்துள்ள அணியினருடன் இணைந்து எனது நாட்டுக்காக ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க நான் ஆர்வமாக இருக்கிறேன். நான் இங்கு விளையாடுவதற்காகவே வந்து இருக்கிறேன். அரசியலில் ஈடுபட வரவில்லை. ஆனால் எதிர்பாராதவிதமாக விளையாட்டுக்கு உள்ளே சில விளையாட்டுகள் நடைபெறுவதை நான் பார்க்கிறேன். இது எனக்கு மிகுந்த மனவருத்தத்தை அளிக்கிறது. இந்தியாவுக்காக நான் 6-வது முறையாக ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதை எதிர்நோக்கி இருக்கிறேன். நாட்டுக்காக நான் கடந்த 22 ஆண்டுகளாக தேசிய கொடியுடன் விளையாடி வருகிறேன். ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டியின் போதும் இதுபோன்ற சர்ச்சைகள் ஏற்பட தான் செய்கிறது. எனது கடின உழைப்பை நாட்டு மக்கள் மதிக்கிறார்கள். ஆனால் சிலர் என்னை அவமதிக்கிறார்கள். இது அவர்களுடைய பிரச்சினை. என்னை பற்றிய விமர்சனங்களை நான் பொருட்படுத்துவதில்லை.

ஆண்கள் இரட்டையர் தர வரிசையில் 7-வது இடத்தில் இருக்கும் நான், 206-வது இடத்தில் உள்ள விஷ்ணுவர்தனுடன் இணைந்து விளையாடுவதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. விஷ்ணுவர்தனிடம் புல் தரையில் விளையாடுவதற்கு ஏற்ற ஷூ இருக்கிறதா? என்பது கூட எனக்கு தெரியாது. அவர் நல்ல இளம் வீரர். அவருடன் இணைந்து ஆடுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அனுபவம் வாய்ந்த வீரரான நான் எனது இணை வீரருடன் ஆட்ட திறமையை பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு லியாண்டர் பெயஸ் கூறினார்.

ஜோடியாகவும், லியாண்டர் பெயஸ்- விஷ்ணு வர்தன் ஆகியோரை இன்னொரு ஜோடியாகவும் ஒலிம்பிக்குக்கு அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது.

தனது கூட்டணியாக ரோகன் போபண்ணாவை அறிவித்திருப்பதால் மகேஷ் பூபதி மகிழ்ச்சி அடைந்துள்ளார், `ஒலிம்பிக்கில் ரோகன் போபண்ணாவுடன் இணைந்து விளையாட இருப்பது உணர்வு பூர்வமான மகிழ்ச்சி அளிக்கிறது. கடந்த சில நாட்களாக நிலவிய சவால்களுக்கு பிறகு, இப்போது தான் நிம்மதி அடைந்து உள்ளேன். இனி ஒலிம்பிக்குக்கு எங்களது ஜோடி தயாராவதில் தான் முழு கவனமும் இருக்கும்.

நானும், பெயசும் நான்கு முறை இணைந்து ஒலிம்பிக்கில் விளையாடியும் ஒரு முறை கூட வெற்றி பெறவில்லை. தற்போது புதிய ஜோடியின் மூலம் சாதிக்க முடியும் என்று நம்புகிறேன். பெயசின் ஜோடி விஷ்ணு வர்தன் அபாயகரமான வீரர். அவருக்கு வாய்ப்பு கிடைத்திருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

ரோகன் போபண்ணா கூறுகையில், `இந்திய டென்னிஸ் சங்கம் சரியான முடிவை எடுத்திருக்கிறது. நானும், பூபதியும் கடினமாக உழைத்து வருகிறோம். ஒலிம்பிக்கில் இணைந்து பங்கேற்க இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது' என்றார்.

தரவரிசையில் பின்தங்கிய வீரரை ஜோடியாக்கியதால், இந்தியாவின் நம்பர் ஒன் வீரரான லியாண்டர் பெயஸ் அதிருப்தியும், ஏமாற்றமும் அடைந்துள்ளார். இந்த முடிவை அவர் ஏற்றுக்கொள்வது சந்தேகம் தான் என்று அவரது தந்தை வேஸ் பெயஸ் கூறினார்.

விஷ்ணுவர்தனுடன் இணைந்து விளையாட தயக்கம் காட்டிய லியாண்டர் பெயஸ், கலப்பு

# விம்பிள்டன் டென்னிசில் பூபதி - சானியா ஜோடி தோல்வி

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் 3-வது சுற்று ஆட்டம் ஒன்றில் 4 முறை சாம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் நூலிழையில் தோல்வியில் இருந்து தப்பினார். அவர் தன்னை எதிர்த்த சீனாவின் ஜி செங்கை 2 மணி 28 நிமிடங்கள் போராடி 6க்கு-7 (5க்கு-7), 6க்கு-2, 9-க்கு7 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 4-வது சுற்றுக்கு முன்னேறினார். 23 `ஏஸ்' சர்வீஸ்களை வீசியது செரீனாவின் வெற்றிக்கு பேருதவியாக இருந்தது.

மற்றொரு ஆட்டத்தில் கஜகஸ்தானின் ஷிவ்டோவா, பிரெஞ்ச் ஓபனில் 2-வது இடம் பிடித்தவரான இத்தாலியின் சாரா எர்ரானிக்கு 6-க்கு0, 6க்கு-4 என்ற நேர் செட்டில் அதிர்ச்சி வைத்தியம் அளித்தார். நடப்பு சாம்பியன் செக்குடியரசின் கிவிடோவா 6-க்கு1, 6க்கு-0 என்ற நேர் செட்டில் லெப்சென்கோவையும் (அமெரிக்கா), 2-ம் நிலை வீராங்கனை பெலாரசின் விக்டோரியா அஸரென்கா 6-க்கு3, 6க்கு-0 என்ற நேர் செட்டில் சுலோவக்கியாவின் சிபலோவாவையும் தோற்கடித்தனர்.

இதுதவிர, அர்ஜென்டினா வீரர் ஜூவான் மார்ட்டின் டெல் போட்ரோ, முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனை செர்பியாவின் இவானோவிச் ஆகியோரும் 3-வது சுற்றில் வெற்றி கண்டனர்.

ஒலிம்பிக்கில் சேர்ந்து விளையாட விரும்பிய தங்களை பிரித்து விட்டதாக குற்றம் சாட்டிய இந்தியாவின் மகேஷ் பூபதி மற்றும் -சானியா மிர்சா ஜோடி விம்பிள்டன் போட்டியில் சாதித்து இந்திய டென்னிஸ் சங்கத்திற்கு நெருக்கடி கொடுக்க திட்டமிட்டது.

ஆனால் விம்பிள்டன் கலப்பு இரட்டையரில் அவர்களது பயணம் 2-வது சுற்றுடன் முடிவுக்கு வந்தது. இதில் அவர்கள் ஆஸ்திரேலியாவின் பால் ஹான்லே, ரஷியாவின் குட்ரியவ்ட்செவா ஜோடியை எதிர்கொண்டனர். 50 நிமிடங்கள் மட்டுமே நடந்த இந்த ஆட்டத்தில் 3-க்கு6, 1க்கு-6 என்ற நேர் செட்டில் பிரெஞ்ச் ஓபன் சாம்பியனான பூபதி மற்றும் -சானியா ஜோடி வீழ்ந்தது. ஒலிம்பிக் கலப்பு இரட்டையரில் சானியா, லியாண்டர் பெயசுடன் இணைந்து விளையாட இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் இரட்டையர் 2-வது சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பெயஸ், செக்குடியரசின் ராடக் ஸ்டெபனக் கூட்டணி 6-க்கு2, 6க்கு-4, 7க்கு-6 (5) என்ற நேர் செட்டில் இஸ்ரேலின் ஜோனதன் எர்லிச் மற்றும் -ஆன்டி ராம் ஜோடியை வீழ்த்தி 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 3-வது சுற்று ஆட்டத்தில் 16-ம் நிலை வீரர் குரோஷியாவின் மரின் சிலிச், 64-ம் நிலை வீரர் அமெரிக்காவின் சேம் குயர்ரியுடன் மோதினார்.

முதல் 4 செட்டுகளை இருவரும் தலா 2 செட் வீதம் வென்ற நிலையில், கடைசி செட்டில் அனல் பறந்தது. இருவரும் நீயா-, நானா போட்டியில் சளைக்காமல் மள்ளுக்கட்டினர். ஒரு கட்டத்தில் வெளிச்சம் குறைந்ததால், ஆட்டம் மறுநாளுக்கு ஒத்திவைக்கப்படும் சூழலும் ஏற்பட்டது. ஆனால் அதற்குள் மரின் சிலிச், எதிராளியின் சவாலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். கடைசி `செட்'டின் முடிவை அறிய மட்டும் 2 மணி நேரத்திற்கு மேலாக காத்திருக்க வேண்டி இருந்தது.

5 மணி 31 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் மரின் சிலிச் 7-க்கு6(6), 6க்கு-4, 6க்கு-7(2), 6க்கு-7(3), 17க்கு-15 என்ற செட் கணக்கில் குயர்ரியை தோற்கடித்து 4-வது சுற்றுக்கு முன்னேறினார். விம்பிள்டன் வரலாற்றில் நீண்ட நேரம் நடந்த போட்டிகளின் பட்டியலில் இந்த மோதல் 2-வது இடத்தை பிடித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 11 மணி நேரம் 5 நிமிடங்கள் அரங்கேறிய அமெரிக்காவின் ஜான் இஸ்னர் மற்றும் -பிரான்சின் நிகோலஸ் மகுத் இடையிலான ஆட்டமே நீண்ட நேரம் நடந்த போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

3வது சுற்றுக்கு நடந்த மற்றொரு ஆட்டத்தில் உள்ளூர் நாயகன் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, சைப்ரஸ் வீரர் மார்கஸ் பாக்தாதிசுடன் மோதினார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முர்ரே 7க்கு-5, 3க்கு-6, 7க்கு-5, 6க்கு-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

Owned & Published by **N.BALASUNDARAM** from 16/2, Sasi Apartments, Anjugam Nagar 1st Main Road, Kolathur, Chennai-600 099 & Printed by Semmozhi Thamizh Achagam, New No.28, Old No.24, Chinnappa Street, Triplicane, Chennai-600 005. Editor: **ALLI MUTHU**.




தமிழ்நாடு மாநில டேபிள் டென்னிஸ் சங்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் 15க்கும் மேற்பட்ட மாநில ரேங்கிங் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான முதல் மாநில ராங்கிங் போட்டி சென்னையில் நேரு ஸ்டேடியத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி. ஏ.கே.ஜி. ஹாலில் நடைபெற்றது. இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆதரவோடு சென்டர் கோர்ட் டேபிள் டென்னிஸ் கிளப் நடத்திய இதில் பல்வேறு வயதுப்பிரிவுகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகள் இந்தியன் ஆயில் நிறுவன செயல் இயக்குனர் வி.கே.ஜெயச்சந்திரனுடன் இருப்பதை படத்தில் காணலாம். அருகில் சென்டர் கோர்ட் தலைவர் ஜேக்கப் ராஜ்குமார், தமிழ்நாடு டேபிள்டென்னிஸ் சங்க இணை செயலாளரும், சென்டர் கோர்ட் கிளப்பின் செயலாளருமான ஜெ.செல்வகுமார் மற்றும் இந்தியன் ஆயில் நிறுவன மேலாளர் (அட்மின்) ஜெ.பிரேம்குமார், புரோக்மென் லாஜிஸ்டிக்ஸ் துணை தலைவர் ராஜிவ் நாதன் ஆகியோர் உள்ளனர்.




சென்னை என்டைசர் டிரையத்லான் லீக் போட்டி துவங்கப்பட்டு சென்னையில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் தீவிரமாக பங்கேற்று வெற்றிகள் பெற்றுவரும் வீரர்களை படத்தில் காணலாம்.




தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணிக்காக பங்கேற்ற 7 பேரில் 6 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் 3 பேர் பதக்கம் வென்றனர். பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகள் தமிழக பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் என்.ஆர்.சிவபதியை சந்தித்து அவரிடம் பாராட்டு பெற்றபோது எடுத்தபடம்.